விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 241 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 32 வியாழக்கிழமை (17.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## புத்தசாசனத்தை பாதுகாக்க குருந்தூரில் பௌத்தர்கள் நாளை ஒன்றிணைக

### நீதிமன்ற அனுமதியுடன் பொங்கலுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில் உதய கம்மன்பில இனவாத கருத்து



(கொழும்பு)

புத்தசாசனத்தை பாதுகாக்க குருந்தூர்மலையில் பௌத்தர்கள் அனைவரையும் ஒன்றிணையுமாறு உதய கம்மன்பில அழைப்பு விடுத்துள்ளார்.

நீதிமன்ற அனுமதியுடன் குருந்தூரில் நாளை பொங்கலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் உதய கம்மன்பில இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

எதுல்கோட்டை பகுதி 15

## இரு வேறு துப்பாக்கிச் சூடு

### இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

தென் மாகாணத்தில் இடம் பெற்ற இரு வேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

தங்காலை குடாவெல்ல பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 15

## நீர்த் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

### ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

தற்போதைய காலநிலை மாற்றத்தினால் நாட்டில் இன்னும் 20 வருடங்களில் பாரிய நீர்த் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக தற்போதைய சூழ்நிலையில் இந்த தருணத்தில் இருந்தே 15

## 13ஐ நீக்க முற்பட்டால் நாடு பற்றி எரியும்

### டிலான் பெரேரா பகிரங்க எச்சரிக்கை



(கொழும்பு)

அரசமைப்பில் இருந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் இந்நாடு பற்றி எரியக்கூடும் என பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தச் சட்டம் என்பது அரசமைப்பில் உள்ள ஓர் அங்கம். அன்று முதல் இன்று வரை 02

கிளிநொச்சி பிரமந்தனாறில்

## பாம்பு கடித்ததில் சிறுவன் உயிரிழப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில் பாம்பு கடிக்கு இலக்கான சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

நேற்று முன் தினம் இரவு இச் 15

## வெளிநாடு அனுப்புவதாகக்கூறி யாழில் கோடிக்கணக்கில் மோசடி

### விசாரணைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடு அனுப்புவதாகக் கூறி யாழில் கோடிக்கணக்கில் பண மோசடி இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஆவரங்கால் பகுதியில் உள்ள உணவகத்தில் பணி புரிந்த நபர் ஒருவர் வெளி நாட்டுக்கு இளைஞர்களை அனுப்புவதாக கூறி பல கோடி ரூபாய் பணத்தை வாங்கி விட்டு தலைமறைவான சம்பவம் ஒன்று 15

## 9 அத்தியாவசிய பொருட்களின் விலை

### சதொசவில் குறைப்பு

(கொழும்பு)

லங்கா சதொச, நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கத்துடன் 9 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்கத் தீர்மானித்துள்ளது.

400 கிராம் LSL பால் மா பாக்கெட்டின் விலை 29 ரூபாயினால் குறைக் 15

## விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் மரணம்

### யாழில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

விபரீத முடிவெடுத்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபருக்கும் அவரது தாயாருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தாயார் அவருடன் சில நாட்கள்பேசவில்லை.

இதனால் மன 02

## மூடப்படாத மனிதப் புதைகுழி; யாழ்.மாநகர சபைக்கு எச்சரிக்கை

### அறிக்கை சமர்ப்பிக்கவும் நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோம்பையன்மணல் மயானத்தில் மூடப்படாத மனிதப் புதைகுழி தொடர்பில் யாழ். மாநகர சபைக்கு எச்சரிக்கை விடுத்துள்ள யாழ்ப்பாண நீதவான், ஒரு வாரத்தில் இது தொடர்பில் முழுமையாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் மயானத்திற்கு அருகாமையில் கடந்த வியாழக்கிழமை சிசு ஒன்றின் தலை மீட்கப்பட்ட 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூடப்படாத...

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் உட்பட மூவரை நேற்று புதன்கிழமை யாழ்ப்பாண நீதவான் முன்னிலையில் ஆஜராகுமாறு வழங்கப் பட்ட கட்டளையின் பிரகாரம் அவர்கள் ஆஜராகினர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பொறுப்பில் உள்ள கோம்பயன் மணல் மயானத்தில் குழி ஒன்று வெட்டப்பட்டு அதில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் இருந்து அகற்றப்படும் இறந்த சிசுக்களை அடக்கம் செய்து வந்துள்ளனர்.

ஆனால் குறித்த குழி மூடப்படாமல் இருந்ததுடன் ஏற்கனவே குழியில் மனித எச்சங்கள் இருந்தமையும் கண்டுபிடிக்கப் பட்டது.

இவ்வாறான நிலையில் கடந்த வியாழக் கிழமை யாழ்ப்பாண நீதவான் மற்றும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இந்நிலையில் அன்று இரவு வியாழக்கி ழமை இரவோடு இரவாக யாழ்ப்பாண மாநகர சபை தொழிலாளர்கள் குறித்த குழியினை மண் போட்டு மூடியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் ஜெயசீ லன் உட்பட மூவரை நேற்று 16ஆம் திகதி புதன்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்ற கட்டளை வழங்கப்பட்டது.

இவ்வாறு நேற்று புதன்கிழமை யாழ்ப் பாண நீதவான் முன்னிலையில் ஆஜராகிய நிலையில் கோம்பயன் மணல் மயானத்தில் உள்ள சடலங்கள் புதைக்கும் குழி ஏன் மூடப்படுவதில்லை என யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் ஜெயசீலனிடம் நீதிபதி கேள்வி எழுப்பினார்.

சடலக்குழி மூடாமை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களை உள்ளடக்கிய விரி வான அறிக்கை ஒன்றை ஒரு வாரத்தில் வழ ங்க வேண்டும் எனவும் யாழ்ப்பாண நீத வான் நீதிமன்ற நீதிபதி ஆனந்தராஜா உத்தரவிட்டார். (ம-7)

## விபரீத...

முடைந்த நபர் கடந்த 14ஆம் திகதி எலிப்பாசனம் அருந்தியுள்ளார்.

இந்நிலையில் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நி லையில் நேற்று முன்தினம் (15) அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த தங்கராசா சதீஷ் (வயது-41) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் திருமணம் செய்த நிலையில் இவருக்கு 8 மாதங்கள் நிரம்பிய குழந்தை ஒன்றும் உள்ளது.

இவரது சடலம் மீதான மரண விசார ணைகளை திடீர் மரண விசாரணை நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-7.33,104)

## 13 ஐ...

அதனை நான் ஆதரித்து வருகின்றேன்.

வடக்கு, கிழக்கு மாகாணம் இணைந்தி ருந்தவேளை காணி அதிகாரம் தொடர்பில் எனக்குக் கவலை இருந்தது. தற்போது அந்தக் கவலையும் இல்லை.

நான் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிப்பதால் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நிலைப்பாட்டில் இருப்பதாகக் கருதிவிட வேண்டாம்.

தற்போதைய சூழ்நிலையில் 13ஐ நடை முறைப்படுத்தாவிட்டாலோ அல்லது மாகாண சபை முறைமையை இல்லாதொழித்துவிட் டாலோ இந்நாடு பற்றி எரியும்.

எனவே, 13ஐ அடிப்படையாகக் கொண்டு தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட வேண்டும். இந்த முயற்சியின்போது அரசியல் "கேம்"களுக்கு இடமளிக்கக்கூடாது என குறிப்பிட்டார். (ம-7)

# சங்கீத பூஷணம் குமாரசாமி காலமானார்



பிரபல சங்கீத வித்துவானும் கோப் பாய் ஆசிரியர் பயி ற்சிக் கலாசாலையின் பிரதி அதிபருமாகிய சங்கீத பூஷணம் செல்லத்துரை குமா ரசாமி (வயது-73) நேற்றுக் காலமானார்.

ஈழத்தின் தலை சிறந்த இசை விற்பன் னரான குமாரசாமி, அண்ணாமலைப் பல் கலைக்கழகத்தில் இசைத்துறையில் பட்டப் படிப்பை நிறைவு செய்தவர்.

பூத்த கொடி பூக்கள் இன்றி தவிக்கின்றது என்ற எம் மண்ணின் திரைப்படப் பாடல் இவர் பாடிய பிரபலமான பாடல் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-33)

# 31ம் நாள் நினைவலைகள்

எமது பாடசாலை ஆசிரியை
**தெய்வராணி சிவகுமார்**
அவர்களின் அன்பு மாமனார்

அமரர்
## பொன்னம்பலம் மாரிமுத்து



மலர்வு 1937.04.08
உதிர்வு 2023.07.18

நித்தம் உங்கள் நினைவில் சுற்றும் சொந்தம்
மூத்த அனுபவத்தில் காத்து நின்ற தந்தை வடிவம்
மூச்சை நிறுத்தி சேர்ந்ததோ இறைபாதம்
உங்கள் நினைவோடு வாழும் சொந்தம்
ஆத்மா அடையட்டும் நிரந்தர சாந்தம்

**உத்தியோகத்தர், நலன்புரிச் சங்கம்**
**கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்**

(C-7078)

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 - 11 - 1955



இறப்பு 16 - 08 - 2023

## இராமசாமி சண்முகசுந்தரம் (Shan)

**(ஆங்கில ஆசான் - Bachelor of Arts in Social Science, Dip in English SP - Trd in English Delic Trd)**

குரும்பகட்டி, புலோலி வட மேற்கைப் பிறப்பிடமாகவும் துறையாமூலை, புலோலி வட மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி சண்முகசுந்தரம் (சண்) (யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம், யா/விக்னேஸ்வராக் கல்லூரி, யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்) அவர்கள் நேற்று (16.08.2023) சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி - நற்குணம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சிவராசா - சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும் வசந்தினியின் பாசமிகு கணவரும் கோபிராம் (இலங்கை வங்கி தலைமைச் செயலகம் - கொழும்பு), கோரட்சன் (கனடா), லோஜிகா (அபி விருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், மருதங்கேணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரசாந்தி (ஆசிரியை - கொழும்பு), சிந்துஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுஷ் (கனடா) பாசமிகு அருமைப் பேரனும் இந்திராணி (ஓய்வுபெற்ற தாதிய சகோதரி - யாழ்), மங்களநாயகி (ஓய்வு பெற்ற தாதிய சகோதரி - வவுனியா), கிருஷ்ணானந்தன் (ஆசிரியர் - வவுனியா), பாலேந்திரன் (கனடா), காலஞ்சென்ற ஸ்ரீபத்மநாதன் (வடபிராந்திய போக்குவரத்துச் சபை, பருத்தித்துறை), நவரட்ணம் (லண்டன்), கருணாநிதி (பதிவாளர் நாயகத் திணைக்களம் - யாழ் MSO - I), பத்மராஜன் (ஓய்வுபெற்ற பொது முகாமைத்துவ உத்தியோகத்தர், காணிப் பதிவாளர் யாழ்), ஜெயந்தி (முன்பள்ளி ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு அண்ணாவும் சாந்தினி (கொலண்ட்), சிவேந்தினி (பிரான்ஸ்), சறோஜினி (இலங்கை), நந்தினி (பிரான்ஸ்), யோகேந்தினி (இலங்கை), பரமானந்தன் (பிரான்ஸ்), சிவானந்தன் (லண்டன்), உதயகிருஸ்ணானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் P.E Centre உபயகதிர்காதம், C.M.E பருத்தித்துறை, B.Con உடுப்பிட்டி, டால்ரன் கரவெட்டி, சதாப்பொன்ஸ் மாலுசந்தி, ஆதிரையான் திக்கம், ரோகினி அக்கடமி வதிரி, வேலும்மயிலும் அறக்கட்டளை நிலையம் பருத்தித்துறை, கேம்பிரிச் கலாசாலை நவிண்டில், கலாசார கல்வி நிலையம் புட்டளை ஆகிய தனியார் கல்வி நிலையங்களின் ஆங்கில ஆசானுமாவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (18.08.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**T.P: 077 755 5542** (C-7080) தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 - 11 - 1951



மறைவு 16 - 08 - 2023

## திருநாவுக்கரசு சித்திரவேல்

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகார சபை)

சாரையடி, தென் மேற்கைப் பிறப்பிடமாகவும் 15 ஆம் கட்டையடி, உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சித்திரவேல் அவர்கள் 16.08.2023 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புலோலி தென் மேற்கு, திருநாவுக்கரசு - பெரியநாச்சிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் 15 ஆம் கட்டையடி, உடுப்பிட்டி காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் இன்பநிதியின் அன்புக் கணவரும் கணபதிப்பிள்ளை காலஞ்சென்றவர்களான திருப்பதி, பரமேஸ்வரி அம்பிகாவதி மற்றும் கார்த்திகேசு ஆகியோரின் சகோதரனும் கேமலதா(அமெரிக்கா), தர்மதா(சிங்கப்பூர்), சஞ்ஜெய்(பொறியியலாளர், கனடா), சர்மிலன் (வைத்தியர், மாவட்ட பொது வைத்தியசாலை, நுவரெலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் வாசுதன்(அமெரிக்கா), ஜனகன்(சிங்கப்பூர்) ஆகியோரின் மாமனாரும் தரணியா, சாருஜன், ஆதிரா ஆகியோரின் அன்புப் பேரனும் புஷ்பநாயகி, காலஞ்சென்ற இராசதுரை, சாந்தகுமாரி, தயாளினி, கமலநாதன், கேதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உடுப்பிட்டி கரம்பாவாளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**15 ஆம் கட்டையடி, உடுப்பிட்டி.** (C-7079) தகவல் - குடும்பத்தினர் **076 458 9970(மனைவி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனையுடன் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கத் தயார்

## ஐக்கிய மக்கள் சக்தி அதிரடி

(கொழும்பு)

**நிபந்தனைகளின் அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கவனம் செலுத்தியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளக தரப்பு தகவல்கள் கூறுகின்றன.**

இதன்படி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவாராயின், எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸவை பிரதமராக நியமிக்க வேண்டும் எனும்நிபந்தனையுடன் ஆதரவளிக்க வேண்டுமென கருதுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் குறித்த நிபந்தனைக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளதாகவும் சஜித் பிரேமதாஸவை பிரதமராக்கும் கோரிக்கையினை முன்வைத்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இந்த நிலையில், பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸவை பிரதமராக நியமிப்பார் என்பது வெளிப்படையானது எனவும் இந்த விடயத்தில் புதிய ஒப்பந்த மொன்று அவசியமற்றது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இந்த விடயத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# ஐ.எம்.எப் பிரதிநிதிகள் இலங்கை விஜயம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று செப்டெம்பர் 14 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இதன்போது இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள விரிவாக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான மீளாய்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இனவாதத்தை கக்கி தமிழர்களை சீண்டாதீர்கள்

## ராஜித எச்சரிக்கை

(கொழும்பு)

இனவாத, மதவாதக் கருத்துக்களைத் தெரிவித்து வடக்கு, கிழக்கு தமிழர்களைச் சீண்டிப் பார்க்க வேண்டாம் என தெற்கு அரசியல்வாதிகளிடம் கேட்டுக் கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் கூறுகையில், கொடூர போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழர்கள் நிம்மதியான வாழ்வையே விரும்புகின்றார்கள்.

அவர்கள் சம உரிமைகளைத்தான் கேட்கின்றார்கள். இன்னொரு போரை அவர்கள் விரும்பவில்லை.

இந்நிலையில், இனவாத, மதவாதக் கருத்துக்களைத் தெரிவித்து அவர்களைச் சீண்டிப் பார்க்க வேண்டாம் என்று தெற்கு அரசியல்வாதிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

இதை நான் சொல்வதால் எனக்கு எதிராகவும் விமர்சனங்கள் வரக்கூடும். அதை நான் பொருட்படுத்த மாட்டேன் என குறிப்பிட்டுள்ளார். (நி)

# தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஒருபோதும் அஞ்சமாட்டேன்

## முன்னாள் அமைச்சர் மேர்வின் இடித்துரைப்பு

(கொழும்பு)

இலங்கை சிங்களவர்களுடைய நாடு, தமிழர்களுடையது அல்ல. ஆகையால் தமிழ் அரசியல் வாதிகளுக்கு ஒருபோதும் நான் அஞ்சமாட்டேன் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

நேற்றையதினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நீதிமன்றில் எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப் போவதாக தமிழ் அரசியல் வாதிகள் கூறுவது குறித்து ஒருபோதும் நான் அஞ்சப் போவதில்லை.

பௌத்த மதத்தை விசுவாசிப்பவன் என்ற வகையில் நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். "உங்களுக்கு பிடித்தால் எங்களுடன் பயணியுங்கள்.எமக்கு வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என வேறுபாடுகள் கிடையாது.

அனைத்து மதத்தவரும் எமது உறவினர்கள். அனைவருக்கும் எமது நாட்டை குறித்து கருத்து தெரிவிக்க முடியும். மலையக மக்கள் காரணமாகவே இன்று இலங்கையில் அந்நியச் செலவாணி பாதுகாக்கப்படுகிறது.

நாட்டின் ஒரு பகுதியை தருமாறு கேட்க அவர்களுக்கு உரிமையுள்ளது. அதனை நான் எதிர்க்க மாட்டேன். எனினும், ஒவ்வொரு தரப்பினரும் இவ்வாறு கேட்கும் பட்சத்தில் அதற்கான நடவடிக்கையாக இலங்கையை பிரிக்க முடியாது.

சிங்களவர்களாக, இலங்கையர்களாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நடவடிக்கையை எதிர்க்க வேண்டும்.



இலங்கையைப் பிரிக்க முயற்சிப்பவர்களின் தலையை எடுப்பதாக கூற ஒருபோதும் நான் பயப்படப் போவதில்லை. இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தாலும் அதனை எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளேன். இதனை தமிழ் அரசியல்வாதிகள் நன்கு நினைவில் வைத்துச் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# சாதாரண தர பரீட்சையின் மதிப்பீட்டுப் பணிகள் விரைவில்

## பரீட்சைத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையின் முதற்கட்ட மதிப்பீட்டுப் பணிகள் நாளை 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் 100 மதிப்பீட்டு நிலையங்களில் இடம்பெறவுள்ளதாக பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் லசிக சமரகோன் குறிப்பிட்டார்.

இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஓகஸ்ட் 27 ஆம் திகதி வரை இடம்பெறும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (நி-5)

# குவைத்தில் தங்கியிருந்த 54 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 54 இலங்கையர்கள் நேற்று புதன் கிழமை நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கைக்கு வர முடியாமல் வீசா இன்றி குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்தவர்களே குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்தின் தலையீட்டினால் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவில் 53 வீட்டுப் பணிப்பெண்களும் ஒரு வீட்டுப் பணியாளரும் அடங்குவர். இவ்வாறு வருகை தந்தவர்களில் பெரும்பாலோர் அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் ஏனையவர்கள் பொலநறுவை, மொனராகலை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நலன்புரிக் கொடுப்பனவுகள் மாற்றமின்றி வழங்கப்படும்

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

புதிய திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் வரையில், சிறுநீரக நோயாளர்கள், விசேட தேவையுடையோர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் முதியோர்களுக்கு தற்போது வழங்கப்படும் நலன்புரிக் கொடுப்பனவை மாற்றமின்றி வழங்கப்படும்.

குறித்த மூன்று பிரிவினர்களிலும், 6 இலட்சத்து 47 ஆயிரத்து 683 பேர் நலன்புரி கொடுப்பனவுகளுக்காக தகுதி பெற்றுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். 5 இலட்சத்து 17 ஆயிரத்துத் 962 முதியோரும், 88 ஆயிரத்து 602 விசேட தேவையுடையோரும், 41 ஆயிரத்து 119 சிறுநீரக நோயாளர்களும் நலன்புரி கொடுப்பனவுக்கான காத்திருப்பு பட்டியலில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து அணியில் மீண்டும் பென் ஸ்டோக்ஸ்

ஒருநாள் கிரிக்கெட் உலக்கிண்ண 2023 தொடர் ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டிகள் இந்தியாவில் நடைபெற உள்ளன. உலகக் கிண்ண தொடருக்காக ஒவ்வொரு அணியும் தீவிரமாக தயாராகி வருகின்றன.

அந்த வரிசையில், இங்கிலாந்து அணி நியூஸிலாந்து அணிக்கு எதிராக ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் விளையாட இருக்கிறது. இதையொட்டி இந்தப் போட்டிகளுக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

இதில் பென் ஸ்டோக்ஸ் இடம்பெற்று இருக்கிறார். கடந்த ஆண்டு இங்கிலாந்து அணியில் இருந்து ஓய்வு பெறுவதாக பென் ஸ்டோக்ஸ் அறிவித்தார்.




எனினும், உலகக்கிண்ண தொடரில் பென் ஸ்டோக்ஸ்ஐ விளையாட வைக்க வேண்டும் என்ற கருத்து பொதுப் படையாக நிலவி வந்தது. மேலும் அணி நிர்வாகமும் இதே போன்ற கருத்தை கொண்டிருந்ததாக தெரிகிறது.

இதன் காரணமாக பென் ஸ்டோக்ஸ் தனது ஓய்வு முடிவை மாற்றிக் கொண்டு உலகக்கிண்ண தொடர் முடியும் வரை இங்கிலாந்து அணிக்காக விளையாட வேண்டும் என்று அணி நிர்வாகம் அவரிடம் பேச்சு வார்த்தை நடத்தியதாக தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில், தற்போது நியூஸிலாந்து அணிக்கு எதிரான இங்கிலாந்து அணியில் பென் ஸ்டோக்ஸ் இடம்பெற்று இருக்கிறார். இதன் மூலம் பென் ஸ்டோக்ஸ் இந்தியாவில் நடைபெற இருக்கும் உலகக் கிண்ண தொடரிலும் விளையாடுவார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது. (4)

## பும்ரா தலைமையில்
# இந்திய கிரிக்கெட் அணி அயர்லாந்து சென்றது

இந்திய கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் விளையாடவுள்ளது.



கப்டன் ஹர்திக் பாண்ட்யா, சுப்மன் கில், சூர்யகுமார் யாதவ், குல்தீப் யாதவ், சஹல் உள்ளிட்ட முன்னணி வீரர்களுக்கு இந்திய அணியில் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

ஜஸ்பிரித் பும்ரா, ருதுராஜ் கெய்க்வாட், ஜெய்ஸ்வால், திலக் வர்மா, ரிங்கு சிங், வாஷிங்டன் சுந்தர், ஷிவம் துபே, ஷபாஸ் அகமது, சஞ்சு சாம்சன், ஜிதேஷ் ஷர்மா, ரவி பிஷ்னோய், பிரசித் கிருஷ்ணா, அர்ஷ்தீப்சிங், முகேஷ் குமார், ஆவேஷ்கான் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

இந்நிலையில், இந்திய கிரிக்கெட் அணி நேற்று முன்தினம் விமானம் மூலம் அயர்லாந்து புறப்பட்டுச் சென்றது. இந்திய அணி கப்டனாக வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா நியமிக்கப்பட்டுள்ளார். சி.எஸ்.கே. வீரர் ருதுராஜ் கெய்வாட் துணை கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் இருபது-20 போட்டி டப்ளினில் நாளை இரவு 7.30 மணிக்கு நடைபெறும். 2 ஆவது இருபது-20 போட்டி ஒகஸ்ட் 20 ஆம் திகதியும் 3 ஆவது இருபது-20 போட்டி 23 ஆம் திகதியும் நடைபெறும். (4)

# கொழும்பு ஸ்ட்ரைக்கஸ் அணியை வீழ்த்தியது காலி டைடன்ஸ்



லங்கா பிரீமியர் லீக் இருபது-20 தொடரின் 20 ஆவது போட்டியில், காலி டைடன்ஸ் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

கொழும்பு-ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற காலி டைடன்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஸ்ட்ரைக்கஸ் அணி, 15.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 74 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது..

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக லஹிரு உதார மற்றும் நுவனிந்து பெனார்டோ ஆகியோர் தலா 14 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

காலி டைடன்ஸ் அணியின் பந்துவீச்சில் டப்ரைஸ் சம்ஸி 4 விக்கெட்டுகளையும் சிக்குகே பிரசன்ன 3 விக்செட்டுகளையும் லஹிரு குமார 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 75 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய காலி டைடன்ஸ் அணி 8.3 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் காலி டைடன்ஸ் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, லசித் கிருஸ்புள்ளே 24 ஓட்டங்களையும் சகிப் அல் ஹசன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் இப்தீகார் அஹமட் மற்றும் ஜெப்ரி வெண்டர்சே ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். (4)

# மகளிர் உலகக் கிண்ண கால்பந்து இறுதிப் போட்டிக்குள் ஸ்பெயின் அணி



பெண்களுக்கான உலககிண்ண கால்பந்து தொடர் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளில் நடைபெற்று வருகிறது.

சில தினங்களுக்கு முன்பு நடைபெற்ற முதல் இரண்டு காலிறுதி ஆட்டங்களில் நெதர்லாந்தை வீழ்த்தி ஸ்பெயின் அணியும் ஜப்பானை வீழ்த்தி சுவீடன் அணியும் அரையிறுதிக்கு முன்னேறின.

முதல் காலிறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியா- பிரான்ஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டி முடிவில் பெனால்டி ஷூட் அவுட் முறையில் 7-6 என அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது. மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து- கொலம்பியா அணிகள் மோதின. இதில் இங்கிலாந்து 2-1 என வெற்றி பெற்றது.

காலிறுதி ஆட்டங்களை தொடர்ந்து நேற்று முன்தினம் முதல் அரையிறுதி போட்டி நடைபெற்றது. இதில் ஸ்பெயின் மற்றும் சுவீடன் அணிகள் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் ஸ்பெயின் அணி 2-1 என்ற அடிப்படையில் சுவீடனை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

அந்த வகையில் 2023 மகளிர் கால்பந்து உலக கிண்ணத் தொடரின் இறுதி போட்டிக்கு முதல் அணியாக ஸ்பெயின் தகுதி பெற்றுள்ளது.

இறுதிப் போட்டி ஒகஸ்ட் 20 ஆம் திகதியும் நடைபெற உள்ளது. இறுதிப் போட்டி பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும். (4)

# பிரேமதாஸ மைதான ஆடுகளங்கள் எல்.பி.எல் போட்டிக்கு உகந்ததல்ல

## சனத்ஜெயசூரிய



பிரேமதாஸ மைதானத்தின் ஆடுகளங்களை மோசமானவை என இலங்கை அணியின் முன்னாள் அதிரடி துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூரிய சாடியுள்ளார்.

ஐ.பி.எல் போட்டிகள் இடம்பெறும் ஆடுகளங்களையே அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

வேகமாக அடித்தாடுவதற்கு உகந்த ஆடுகளங்கள் அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

எல்.பி.எல் போட்டிகளுக்கான பிரேமதாஸ மைதானத்தின் மோசமான ஆடுகளங்கள் குறித்து ஏமாற்றமடைந்துள்ளேன் என தெரிவித்துள்ள அவர் அடுத்த சுற்று தகுதிகாண் போட்டிகள் சிறந்த ஆடுகளத்தில் இடம் பெறும் என எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளார்.

பிரேமதாஸ மைதானத்தின் ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு உகந்ததாக காணப்படாததால் அணிகள் அதிக ஓட்டங்களை பெறுவதற்கு சிரமப்படும் நிலை காணப்படுகின்றது. (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இந்திய அரிசி ஏற்றுமதி தடை; உலகின் பல நாடுகள் பாதிப்பு

(கொழும்பு)

அரிசி ஏற்றுமதியை தடை செய்வதற்கான இந்தியாவின் முடிவு, உள்நாட்டு காரணங்களை அடிப்படையாகக் கொண் டது. ஆனால் அது உலகளாவிய தாக்கங்களை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கருங்கடல் தானிய ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா வெளியேறிய மூன்று நாட்களுக்குப் பிறகு ஜூலை 20 அன்று பாஸ்மதி அல்லாத வெள்ளை அரிசி ஏற்றுமதியை இந்தியா தடை செய்தது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் அமுல்படுத்தப்பட்டு தற் போதும் நடைமுறையில் உள்ள உடைந்த அரிசி ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்ப ட்ட நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு உணவுப் பொருட்களின் விலை உயர்வு, பண வீக்கம், நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்ற அச்சம் போன்ற காரணங்களால் இந் தியா இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

உலகின் மிகப்பெரிய அரிசி ஏற்றுமதியாளரான இந்தியா, 2022 ஆம் ஆண்டில் உலக அரிசி வர்த்தகத்தில் கிட்டத்தட்ட 40 சதவீதத்தை கைப்பற்ற உள்ளது.

இந்தியாவின் தடைக்கு பின் னர் உலகளாவிய அரிசி விலை 15-25 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்திய வெள்ளை அரிசியை நம் பியுள்ள பங்களாதேஷ் மற்றும் நேபாளம் போன்ற நாடுகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும், உடைந்த அரிசியை உட்கொள்ளும் பெனின், செனகல், டோகோ, மாலி போன்ற ஆபிரிக்க நாடுகளும் இதன் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. (நி)

# உயர்தர மருத்துவ ஆய்வுகூடத்தை இலங்கையில் நிறுவுமாறு கோரிக்கை

(கொழும்பு)

மருந்துகளின் தரத்தை பரிசோதிப்பதற்காக இலங்கையில்தரமான ஆய்வுகூடத்தை அமைப்பது தொடர்பாக சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல உலக சுகாதார ஸ்தாபனத்துடன் கலந்துரை யாடல் ஒன்றை மேற் கொண்டுள்ளார்.

மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கான முறையான பொறிமுறை நாட்டில் இல்லாததை நிவர்த்தி செய்யும் முகமாகவே இந்த கலந்துரையாடல் நிகழ்ந்தாக அமைச்சர் தெரிவித்தார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதி மருத்துவர் அலங்கா சிங்குடன் நேற்று முன்தினம் சந்திப்பை நடத்தியதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அந்த ஆய்வகத்தை தடையின்றி செயற்படுத்துவதற்கான விதிமுறைகள் மற்றும் விபரக்குறிப்புகளை வழங்குமாறு உலக சுகாதார நிறுவனத்திடம் கோரியதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் இவ்வாறனதொரு ஆய்வகத்தை நிறுவமுடிந்தால் பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளுக்கு பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலமும் வருமானத்தை ஈட்ட முடியம் என்றும் அவர் விளக்கமளித்துள்ளார். (நி-5)

# இராசிபலன்

17.08.2023
ஆடி 32 வியாழக்கிழமை
பிரதமை பிற்பகல் 5.36 மணிவரை
மகம் முன்னிரவு 8.47 மணிவரை

சுபநேரம் -7.35-9.05 மணிவரை
இராகுகாலம்-1.35-3.05 மணிவரை
அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்-
உத்தரம், திருவோணம்.

வளவன்

**மேஷம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பொதுவழியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மகரம்** கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தில் சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், வேலைச் சுமை கூடும் நாள்.

**ரிஷபம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** நண்பர்கள் ஒளிவு மறைவின்றிப் பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் வளர்ச்சி கூடும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**கன்னி** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**தனுசு** அரைகுறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாக செய்து முடிப்பீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உங்களை விட்டு விலகலாம்.

**மீனம்** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கொடுக்குற ... உறவு இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினையை மூடி மறைக்க ஆளும் தரப்பினர் முயற்சி

## சிறீதரன் எம்.பி சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

**இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை எனவும் பொருளாதாரப் பிரச்சினையே உள்ளதாகவும் காண்பிக்கும் முயற்சிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஆளும் தரப்பினர் முன்னெடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் சுட்டிக் காட்டியுள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் பௌத்த இனவாதி கள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு எந்த வகையிலும் விரும்பத்தகாத வர்கள்.

யுத்தம் முடிவடைந்து 13 வருடம் கடந்த நிலையிலும் எந்த ஒரு பௌத்த அரசியல்



வாதியும் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுத்தராது. நாட் டில் பௌத்தர்களின் அபிலாசை களை தனியாகவும் தமிழ்க ளின் அபிலாசைகளை தனி யாகவும் இருப்பதாகவே நினைக்கின்றனர்.

நாடு ஒரு தீவுக்குள் இருந் தாலும் இரு நாடு போலவே செயற்படுகின்றார்கள்.

தமிழர்கள் ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலையில் வாழ்வதாகவும் பௌத்தர்கள் சுதந்திரமாக வாழ்வதாகவும் எண்ணுகிறார்கள் எனவும் தெரிவித்தார். (நி-4-6)



யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய பரிசில் தின விழா கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது.

## சிறைக் கைதிக்கு தொலைபேசி வழங்கிய அதிகாரி கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச் சாலையில் கைதி ஒருவருக்கு தொலைபேசி வழங்கிய குற் றச்சாட்டில் சிறைச்சாலை அதி காரி ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

சிறைச்சாலையில் நடை பெற்ற சோதனையில் தொலை பேசி ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சிறைச் சாலை அதிகாரிகளால் கைப் பற்றப்பட்டது. சிசிடிவி கண்கா ணிப்பு கமராக்கள் மூலம் கண் காணிக்கப்பட்டு கைதிக்கு தொலைபேசி வழங்கிய சிறைச் சாலை அதிகாரி கைது செய்ய ப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட் டதுடன் நீதிமன்றில் முற்படுத்த வும் நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது. (நி-4-6-33-104)

## யாழ்.பல்கலையில் அரங்க விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக, சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்றுகை மற்றும் கட்புலக் கலைகள் பீட த்தின் நாடகமும் அரங்கக் கலைகள் துறையின் மாணவர் அமைப்பான வெறுவெளி அர ங்கக் குழுவும் இணைந்து நட த்தும் அரங்க விழா 2023 ஆனது இன்று மற்றும் நாளை ஆகிய தினங்களில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக, கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

எழுத்துரு முதல் நெறியா ள்கை வரை என அனைத்து நாடகச் செயன்முறைகளையும் மாணவர்களே முன்னெடுத்து ஆற்றுகைகளை அளிக்கை செய்யும் நாடக விழாவாக இந்த அரங்க விழா அமைகின்றது.

யாழ்.பல்கலைக்கழக நாட கத்துறை மாணவர்களின் 10 நாடக ஆற்றுகைகளும் கொழு ம்பு கட்புலக்கலைகள் மற்றும் ஆற்றுகைக் கலைகள் பல் கலைக்கழகத்தின் 3 நாடக ங்களும் இவ் அரங்கவிழாவின் மாணவ நெறியாளர்களை மையப்படுத்துகின்றன.

அத்தோடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகத்துறை விரிவுரையாளர் கலாநிதி. க.ரதிதரன் நெறியாள்கை யில் இரு குறுநாடகங்களும் ஆற்றுகை செய்யப்படவுள் ளன. (நி-4-6)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்.வடகிழக்கு கல ட்டி வீரகத்தி பிள்ளையார் ஆலய சதுர்த்தி உற்சவம் எதிர் வரும் 20 ஆம் திகதி ஞாயி ற்றுக்கிழமை இடம்பெறவுள் ளது.

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு அபிஷேகம், மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை நடைபெற்று விநாய கப் பெருமான் திருவீதி வலம் வருவார் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவே கானந்த குருக்கள் அறிவித்து ள்ளார். (நி-4-6)

## 10 ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

'வல்லமை' சமூக மாற்றத் திற்கான போராட்ட இயக்கத் தின் 10 ஆவது ஆண்டு விழா நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 8.30 மணி க்கு உரும்பிராய் யோகபுரம் சன சமூக நிலைய வளாகத்தில் கிராம மக்களுடன் இணைந்து நடைபெறவுள்ளது. (நி-4-6)

## அரச மருத்துவ கூட்டுத்தாபனத்திற்கு புதிய தலைவர் நியமனம்

(கொழும்பு)


இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக மருத்துவர் அஜித் மெண்டிஸ் நியமிக்கப்பட்டு ள்ளார்.

இந்த நியமனத்தை சுகா தார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல வழங்கி வைத் தார்.

இதனை தொடர்ந்து, அஜித் மெண்டிஸ் உத்தியோக பூர்வமாக கடமைகளைப் பொறு ப்பேற்பார் என கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், முன் னாள் தலைவர் சரத் லியனகே பல குற்றச்சாட்டுக்கள் காரண மாக அமைச்சரால் பதவிநீக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (நி-4)

## வவுனியாவில் பாடசாலைக்குள் நுழைந்த காட்டு யானை



(வவுனியா)

வடக்கு மருதொடை அர சினர் தமிழ் கலவன் பாட சாலை வளாகத்திற்குள் நேற் றுக் காலை காட்டு யானை யொன்று புகுந்துள்ளதால் அப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டு ள்ளது.

இதனையடுத்து கிராம மக்கள் ஒன்றிணைந்து குறித்த காட்டுயானையைக் காட்டுக்குள் விரட்டியதாகவும், எனினும் குறித்த யானையானது அக் கிராமத்தினை அண்டிய பகு தியிலேயே தொடர்ந்து சுற்றி யதாகவும் தெரிவிக்கப்பட் டது.

மேலும் குறித்த யானை யின் காலில் காயம் ஏற்பட்டுள்ள நிலையில் இது குறித்து வன ஜீவராசிகள் திணைக்களத் திற்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது. (நி-4-6)

# ஜப்பான் நாட்டின் உதவியில் உணவுப் பற்றாக்குறைக்கு தீர்வு!

## ஐ.நா பிரதிநிதி நம்பிக்கை

(சாவகச்சேரி)

இலங்கையில் நிலவி வரு கின்ற உணவுப் பற்றாக் குறையை எதிர்காலத்தில் தீர் க்க முடியுமென ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய தாபனத்தின் இல ங்கை மற்றும் மாலைதீவுக ளுக்கான வதிவிடப் பிரதிநிதி விமலேந்திரசரண் தெரிவித் துள்ளார்.

ஜப்பான் மக்களின் நிதி உதவியுடன் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக சிறு விவசாயிகளுக்கு உரம் வழங்கும் நிகழ்வு, அண்மை யில் சாவகச்சேரி கமநலசேவை நிலையத்தில் இடம்பெற்ற போதே அவர் மேற்படி தெரி வித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கை யில் இலங்கையில் விவசாயி கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினை கள் தொடர்பாகவும் அதற்கான தீர்வுகள் தொடர்பிலும் ஆரா ய்ந்து வருகிறோம்.

விவசாயிகள் கடுமையாக உழைத்தே அறுவடையைப் பெறுகின்றனர். ஜப்பான் நாட்டு மக்களுடைய உதவியில் கிடைத்த யூரியா உரம் மூலம் விவசாயிகள் பயனடைய வேண்டும்.

ஜப்பான் நாட்டின் உதவி யின் ஊடாக எதிர்காலத்தில் நாட்டில் நிலவி வருகின்ற உணவுப் பற்றாக்குறையை தீர்க்க முடியும்.

இந்த உதவிகள் எதிர்காலத் திலும் தொடரும் என நம்புகி றோம். ஜப்பான் நாட்டின் உத விகளை விவசாயிகளுக்கு உரிய முறையில் சென்றடை வதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மற்றும் விவசாய திணைக்கள உத்தி யோகத்தர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கை விவசாயிகள் இடர்பாடான காலத்தில் கூட ஓரளவு அறுவடையை பெற்று வருகிறார்கள்.

ஜப்பான் நாட்டின் இந்த உதவி அறுவடையை மேலும் அதிகரிக்கும் என அவர் தெரி வித்தார். (நி-4-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ஆயிரம் வயல் நிலங்கள் வறட்சியால் பாதிப்பு

## விவசாய அமைச்சு தெரிவிப்பு



(கொழும்பு)

**வறட்சியான வானிலை காரணமாக நாடளாவிய ரீதியில் சுமார் 50 ஆயிரம் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.**

இதனால் 46,000 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வறட்சியினால் நாடளாவிய ரீதியில் நெற்பயிர்கள் மற்றும் ஏனைய பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விவசாயம் மற்றும் விவசாய காப்புறுதி சபை இதற்கான பணிகளை மேற்கொள்கின்றது.

சிறுபோகத்தில் 6 இலட்சம் ஹெக்டேயருக்கும் அதிக காணியில் நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. அழிவடைந்த நெற்பயிர்களுக்காக ஹெக்டேயருக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

இதனிடையே, இழப்பீட்டை அதிகரிப்பதற்கான யோசனைகளை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவித்துள்ளார். (நி-5)

# பொருளாதார நெருக்கடிக்கு மத்திய வங்கியே காரணம்

## கானா பாராளுமன்ற தலைவர் விமர்சனம்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு இலங்கையின் மத்திய வங்கியே காரணம் என கானா பாராளுமன்றத்தின் பெரும்பான்மை தலைவர் ஓசிகியே - மென்சா போன்சு தெரிவித்துள்ளார்.

கானா மத்திய வங்கி தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை குறித்து கருத்துரைத்த போதே அவர் இலங்கை மத்திய வங்கியை விமர்சித்துள்ளார்.

2022 ஆம் நிதியாண்டில் கானாவின் மத்திய வங்கி பாரிய இழப்பை பதிவு செய்தது. இதன் விளைவாக கானாவின் உள்நாட்டு கடன் பரிமாற்றத்தில் 50 சதவீதத்தை துண்டிப்பதற்கு நேர்ந்தது.

இதனையடுத்து கானா மத்திய வங்கியின் ஆளுநரை பதவி விலகுமாறு அந்த நாட்டு பாராளுமன்றத்தில் சிறுபான்மையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கருத்துரைத்துள்ள பாராளுமன்றத்தின் பெரும்பான்மை தலைவர் ஓசி கியே - மென்சா போன்சு, கானா மத்திய வங்கி நேரடியாக பாராளுமன்றத்துடன் தொடர்புடையது இல்லை என குறிப்பிட்டுள்ளார். அத்துடன் மத்திய வங்கி நிதியமைச்சருக்கு தங்களது நடவடிக்கைகள் தொடர்பில் தகவல் வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே , மத்திய வங்கியின் பிரச்சினையை அரசியலாக்குவது நாட்டுக்கு சிறந்ததில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையும் இதே போன்ற பொருளாதார நெருக்கடி நிலையில் காணப்பட்ட போது இலங்கை மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க முடியவில்லை .இலங்கையில் தொடர்ந்தும் பொருளாதார நெருக்கடி நீடிக்கிறது. எனவே , தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் நாட்டிற்கு ஆதரவளிப்பதற்கு மத்திய வங்கிக்கு முடியுமாயின் அதற்கு ஆதரவளிக்க வேண்டும் என அவர் தெரிவித்துளளார். (நி)


# ஜனாதிபதி- சட்டத்தரணிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

2022/2023 ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதி- சட்டத்தரணிகளை தெரிவு செய்வதற்கான தகுதியுடைய சட்டத்தரணிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஓகஸ்ட் 25 ஆம் திகதி வரையில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் மேலதிக விபரங்களுக்கு www. presidents office. gov.lk இப்பகுதியின் ஊடாக இணைந்து கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-5)

# நிதியமைச்சில் தீ விபத்து




(கொழும்பு)

பழைய பாராளுமன்ற கட்டடத்தில் அமைந்துள்ள நிதியமைச்சின் இரண்டாவது மாடியில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீயணைப்பு வாகனங்கள் குறித்த இடத்திற்கு வருகை தந்ததுடன் நிலைமைகட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)


## Invitation for Bids (IFB)
## KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI DISTRICT

[1].The Chairman Local Authority Procurement Committee (LAPC), on behalf of Karachchi Pradeshiya Sabha, now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. No | Bid No. | Name of the Bid | Estimated Civil Cost (Rs.Mn) | ICTAD Grade Required | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bond Amount (Rs.) | Validity Period | |
| 01 | NP/KN/KPS/ 2023/PSDG-2 | Construction of Cemetery hall & renovation of access road at Barathipuram | 2.8 | C9,C8 & C7 (Building Construction) | 28,000 | 13.12.2023 | 77 days |
| 02 | NP/KN/KPS/ 2023/PSDG-3 | Drinking water supply System for the Kilinochchi Service Market-Karachchi ps | 3.1 | C9,C8 & C7 (Building Construction) | 31,000 | 13.12.2023 | 84 days |

[2]. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure. And Public Finance Circulars No 03/2020 (i) and 04/2016 dated 11,01.2021 and 18.02.2021 respectively will be adopted.

[03].To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty **mentioned in Schedule** for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

[4]. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data , Schedule and Contract Data) of the Bidding document.

[5]. Interested bidders may obtain further information from **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** (T.P No: 021 228 5761, Fax No: 021 2285 690) and inspect the bidding documents at the address given below from **17th August 2023** until **31st August 2023** during **09:00Hrs to 16:00** Hrs on normal working days.

[6]. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** from **17th August 2023** until from **31st August 2023** during **09:00Hrs to 14:00Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Two Thousand Rupees(Rs.2,000.00)**. The method of payment will be by cash.

[7]. Bid shall be delivered in duplicate to the address below at **Chairman, Procurement Committee, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** on or before **14.00Hrs on 31st August 2023** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

[8]. Bid shall be valid up to **15th November 2023.** All bids shall be accompanied by a Bid-Security, as mention in the table above.

[9]. A pre-bid meeting will be held at 11.00 Hrs on **23rd August 2023 at Karachchi Pradeshiya Sabha,A9 Road, Kilinochchi.**

**Chairman,**
**Procurement Committee,**
**Karachchi Pradeshiya Sabha,**
**A9 Road, Kilinochchi.**

(C-7077) 17.08.2023


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 181

# பேருந்து பயணத்தில் நடந்த நெகிழ்ச்சியான...

ராம் சாலையில் பயணித்த வேளையில் கார் திடீரென நின்று விட்டதால் அதை ஓரமாக நிறுத்திவிட்டு பேருந்தில் ஏறி நின்று கொண்டே பயணித்தான். ஆனால் உள்ளே இருந்த கூட்டத்தைப் பார்க்க பயமாக இருந்தது. உட்கார இடம் இல்லை. கசகசவென இருந்தது. அந்த நேரத்தில் ஒரு ஆசனம் காலியானது.

அந்த ஆசனத்துக்கு அருகே நின்றிருந்த நபர் அதை எளிதாக ஆக்கிரமித்திருக்கலாம்.

அதற்குப் பதிலாக அவர் ராமுக்கு அந்த ஆசனத்தை வழங்கினார். அடுத்த பேருந்து நிறுத்தத்தில் அதே விடயம் நடந்தது. மீண்டும் தனது ஆசனத்தை வேறொருவருக்குக் கொடுத்தார்.

ராம் அவரைக் கவனித்துக் கொண்டிருந்தான். இது முழு பேருந்துப் பயணத்திலும் நான்கு முறை நடந்தது. கடைசி பேருந்து நிறுத்தத்தில் அந்த நபர் சோர்வாக இருந்தார். இறுதியில் அந்த பேருந்து நிறுத்தத்தில் அனைவரும் இறங்கினார்கள். ஒரு ஆர்வத்தில் ராம் அவரிடம் பேசினான்.

ஒவ்வொரு முறையும் உங்கள் ஆசனத்தை இன்னொருவருக்கு ஏன் கொடுக்கிறீர்கள் என்று கேட்டதற்கு அவர் கொடுத்த பதில் சுவாரஸ்யமாக இருந்தது. "நான் படிக்காதவன். என்னிடம் கொடுக்க ஒன்றும் இல்லை, அறிவும் இல்லை, பணமும் இல்லை.

மற்றவர்களுக்காக நான் எளிதாக செய்யக் கூடிய ஒரே விடயம் இதுதான்.

எனவே இதை நான் தினமும் செய்கிறேன். நாள் முழுவதும் வேலை செய்தாலும் என்னால் இன்னும் சிறிது நேரம் நிற்க முடியும். நான் உங்களுக்கு ஆசனத்தைக் கொடுத்த போது நீங்கள் நன்றி சொன்னீர்கள். நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்ந்தேன். ஒருவருக்கு ஏதாவது உதவி செய்வது எனக்கு திருப்தி அளிக்கிறது. எனவே நான் இதை தினமும் செய்து விட்டு புத்துணர்ச்சியுடன் வீட்டிற்குச் செல்வேன். அவர் அளித்த பதில் கேட்டு ராம் வியப்படைந்தான்.

அவரது சிந்தனையும் புரிதலும் வைத்துக் கொண்டு அவரை பாமரர் என்று சொல்ல வேண்டுமா?

முற்றிலும் அறியப்படாத மற்றும் தினசரி அடிப்படையில் ஏதாவது ஒன்றைக் கற்க வேண்டும் என்ற முனைப்பில் இருந்த ராமுக்கு இந்த அருமையான பாடத்தை இறைவன் அவரின் மூலம் கற்பித்திருக்கிறான்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் Valampurii@yahoo.com இலக்கத்திற்கு அல்லது எனும் E.Mail இற்கு அனுப்பி வையுங்கள்

# 2030 இற்குள் புகைப்பழக்கத்தை முற்றாக ஒழிக்க இங்கிலாந்து அரசாங்கம் தீர்மானம்

(லண்டன்)

இங்கிலாந்தில் 2030 ஆம் ஆண்டுக்குள் புகைப்பழக்கத்தை முற்றிலும் ஒழிக்க அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாக அந்த நாட்டின் சுகாதார அமைச்சர் ஸ்டீவ் பார்க்லே தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் ஆண்டுதோறும் அதிகரித்து வரும் புகைப்பழக்கத்தின் காரணமாக உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், ஆண்டுக்கு சுமார் 5 இலட்சம் பேர் புற்று நோய், மாரடைப்பு உள்ளிட்ட நோய்களால் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

இதனால் தனிநபருக்கு மட்டுமின்றி அரசாங்கத்துக்கும் சுகாதார செலவுகள் அதிகரித்து வருகிறது.

எனவே இதனை குறைக்க அரசாங்கம் பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன் ஒருபகுதியாக சிகரெட் பாக்கெட்டுகளில் அதனால் ஏற்படும் பாதிப்புகளையும், புகைப்பழக்கத்தை கைவிடும் போது ஏற்படும் நன்மைகளையும் குறிப்பிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (5)

# டொமினிகன் குடியரசின் தலைநகர் அருகே வெடி விபத்து

## 11 பேர் உயிரிழப்பு



(சான்ரோ)

டொமினிகன் குடியரசின் தலைநகருக்கு அருகே இடம் பெற்ற ஒரு சக்திவாய்ந்த வெடி விபத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

மருத்துவமனைகளுக்கு வெளியே மக்கள் கூடியுள்ள அதேநேரம் காணாமல் போனவர்களைத் தேடி, எரியும் இடிபாடுகளுக்குள் தீயணைப்பு வீரர்கள் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

ஜனாதிபதி லூயிஸ் அபினாடர், சான்டோ டொமிங்கோவின் மேற்கே அமைந்துள்ள சான் கிறிஸ்டோபலுக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்தார்.

மேலும் 10 பேரைக் காணவில்லை என்றும், இடிந்து விழுந்த கட்டடங்கள் மற்றும் எரிந்த வாகனங்களுக்கு மத்தியில் தீயை அணைக்கும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# பிரதமராகவல்ல; இந்துவாக வந்துள்ளேன்

## பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்



(லண்டன்)

இந்து மத நம்பிக்கை, தன்னை மிகச்சிறந்த பிரதமராக செயற்பட வழிகாட்டுவதாக பிரித்தானிய பிரதமர் ரிஷிசுனக் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஆன்மிக தலைவரான மொராரி பாபு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நடத்திய ராமகதை உபன்யாசத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த உரையில் "இந்திய சுதந்திர தினத்தன்று ராமகதை நிகழ்ச்சியில் பங்கேற்பதை பெருமையாகக் கருதுகிறேன். நான் இங்கு பிரதமராக வரவில்லை, ஓர் இந்துவாக வந்துள்ளேன்" எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இராமாயணம், பகவத் கீதை மற்றும் அனுமான் சாலிசா ஆகியவற்றை நினைவுகூர்ந்த அவர் தனது உரையை ஆரம்பிக்கும் போதும், முடிக்கும் போதும் ஜெய் ஸ்ரீராம் எனக் கூறியிருந்தார். (நி-5)

# ஒமிக்ரோனை கட்டுப்படுத்த புதிய தடுப்பூசி

(வோஷிங்டன்)

ஒமிக்ரோனை கட்டுப்படுத்த புதிய தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்காவில் 240 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் சுமார் ஒரு தடுப்பூசியைப் பெற்றுள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

மேலும் 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பெரும்பாலான மக்கள் கொரோனா வைரஸ் தடுப்பூசியை 50 மில்லியனுக்கும் குறைவான மக்களே பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

க்க
ரம்
றைக்க
டு நட
றது.
சிகரெட்
தனால்
ளையும்,
கவிடும்
ன்மை
விழிப்
ளங்கம்
(5)
ன்
து
போன
எரியும்
ணைப்பு
டவடிக்
துள்ள
லுயிஸ்
டொ
அமைந்
வுக்குச்
களைச்
காண
இடிந்து
மற்றும்
ளுக்கு
ணக்கும்
ள் ஈடு
ரிவிக்கப்
(நி-5)
ளன்
நடத்திய
சிறப்பு
டு உரை
று தெரி
சுதந்திர
ல் பங்கே
ன். நான்
லை, ஓர்
வும் தெரி
வத் கீதை
யவற்றை
டரையை
போதும்
(நி-5)
ப்பூசியைப்
கூறுகின்
டு காலப்
காரோனா
யனுக்கும்
மை குறிப்
(நி-5)

## லிபியா தலைநகர் திரிபோலியில் ஆயுதக் குழுக்களுக்கிடையே மோதல்

- 27 பேர் உயிரிழப்பு
- 106 பேர் காயம்



(திரிபோலி)

**லிபியா தலைநகர் திரிபோலியில் இரண்டு ஆயுதக் குழுக்களுக்கு இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 27 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 106 பேர் காயமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு அவசர மருத்துவ உதவிப் பிரிவு அறிவித்துள்ளது.**

2011 இல் முயம்மர் கடாபி அகற்றப்பட்டதிலிருந்து அதிகாரத்திற்காக போட்டியிட்ட எண்ணற்ற போராளி குழுக்களில் இரண்டான 444 படைப் பிரிவுக்கும் அல்-ராடா அல்லது சிறப்புத் தடுப்புப் படைக்கும் இடையில் மோதல் ஆரம்பமாகியுள்ளது.

தலைநகரின் தெற்கு புறநகர்ப் பகுதிகளில் உள்ள முன் வரிசைப் பகுதிகளிலிருந்து மொத்தம் 234 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டதாகவும், காயமடைந்தவர்களை சிகிச்சைக்கு உட்படுத்தி வருவதாகவும் அவசர மருத்துவ உதவி பிரிவு அறிவித்துள்ளது. (நி-5)

## ரஷ்ய எரிபொருள் நிலைய வெடி விபத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை உயர்வு

(மொஸ்கோ)


ரஷ்யாவின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளது.

ரஷ்யாவின் காகசஸ் குடியரசின் தாகெஸ்தானில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. இந்த வெடிவிபத்தில் 12 பேர் உயிரிழந்தனர் என்றும் 60 இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர் என்றும் முதல் கட்ட தகவல் வெளி யானது.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக் குழுவினர் பற்றி எரிந்த தீயை அணைத்தனர். படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், வெடி விபத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-5)

## தீ விபத்து குறித்து ஆராய ஜோபைடன் ஹவாய் பயணம்



(வோஷிங்டன்)

ஹவாய் தீவில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பில் ஆய்வை மேற்கொள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் ஹவாய் தீவுக்கு சென்றுள்ளார்.

அமெரிக்காவின் ஹவாயில் உள்ள தீவுக் கூட்டங்களில் 2 ஆவது மிகப்பெரிய தீவான மவாய் தீவில் கடந்த 8 ஆம் திகதி காட்டுத் தீ ஏற்பட்டது. இதனால் 90 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் 15000 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் தீ விபத்து தொடர்பில் ஆராய ஜனாதிபதி ஜோபைடன் அங்கு சென்றார். இதன்போது தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகளை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் ஹவாய் தீவுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அமெரிக்கா வழங்குவதற்கு தயாராக இருப்பதாகவும் ஆளுநர் ஜோஷ் கிரீனிடம் உறுதியளித்துள்ளார். (நி-5)

## பிரம்மாண்ட அணிவகுப்பை நடத்தி ரஷ்யாவை எச்சரித்த போலந்து



(வார்சா)

போலந்து வரலாற்றில் மிகப் பெரிய இராணுவ அணி வகுப்பை அந்நாட்டு அரசாங்கம் நடத்தியுள்ளது.

ஆயுதப்படை தினமான நேற்று முன்தினம் அந்த நாட்டு அரசாங்கம் இராணுவ அணி வகுப்பை நடத்தியுள்ளது.

இதில் 200 இராணுவ வாகனங்கள், 92 இராணுவ விமானங்கள், HIMARS லாஞ்சர்கள், K2 டாங்கிகள், பேட்ரியாட் வான் பாதுகாப்பு அமைப்புகள், Bayraktar TB2, போர்சுக் போர் ட்ரோன்கள், மற்றும் M1A1 ஆப்ராம்ஸ் போன்றவை உள்ளடங்கியுள்ளன.

அத்துடன் இதில் அமெரிக்கா, பிரித்தானியா, குரோஷியா மற்றும் ருமேனியா ஆகிய நாடுகளை சேர்ந்த இராணுவ அதிகாரிகள் அணி வகுப்பில் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

## துபாயில் மிக உயரமான கட்டடத்தில் ஜொலித்த இந்திய தேசியக் கொடி



(அபுதாபி)

துபாய் நாட்டில் உள்ள உலகின் மிக உயரமான புர்ஜ் கலிபா கட்டடத்தில் இந்திய தேசியக் கொடி லேசர் ஒளியால் ஒளிபரப்பப்பட்டது.


இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு புர்ஜ் கலிபா கட்டடத்தில் லேசர் ஒளியால் இந்தியாவின் மூவர்ண கொடி, மகாத்மா காந்தியின் உருவம் உள்ளிட்டவை லேசர் ஒளியில் ஒளிபரப்பானது.

புர்ஜ் கலிபா மற்றும் துபாயில் உள்ள பல்வேறு பொழுது போக்கு அம்சங்களுக்காக உலக நாடுகளில் இருந்து லட்சக்கணக்கான சுற்றுலா வாசிகள் ஆண்டுதோறும் இங்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் சில காணிகளை விடுவிக்க இணக்கம்

## செல்வம் எம்.பி தகவல்



(நெளுக்குளம்)

மக்களுடைய காணிகள் திட்டமிட்டு அபகரிக்கின்ற சூழ் நிலையிலே விடுவிப்பு என்பது நல்ல விடயமாக பார்க்க கூடி யதாக இருக்கின்றது.

இது நடைமுறைப்படுத்தப் பட வேண்டும் என பாராளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித் தார். முல்லைத்தீவு மாவட்டத் திலுள்ள தமிழ் மக்களின் காணி பிரச்சினைகள் தொடர் பில் விஷேட கலந்துரையாடல் ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்றிருந்தது. கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு கரு த்து தெரிவிக்கையிலே இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரி விக்கையில், முல்லைத் தீவிலே காணி விடுவிப்பு சம் மந்தமான கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதத்தின் முடிவிலே இடம்பெறும் பிரச்சி னைகளை அனுப்ப வேண்டிய தேவை இருக்கின்றபடியால் குறித்த கலந்துரையாடல் ஏற் பாடு செய்யப்பட்டது.

வன, லாகா பொறுப்பதிகா ரிகள் இங்கே அழைக்கப்பட் டிருந்தார்கள். அந்த அடிப்ப டையில் மாவட்ட செயலகம் கொடுத்த பல இடங்களில் தற் போது சில இடங்கள் விடுவிக் கின்ற முடிவை எட்டியிருக்கி ன்றன.

உண்மையிலே நல்ல விட யமாக பார்க்க கூடியதாக இரு க்கின்றது. இது நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். கூட்டம் போட்டு பேசி முடிவுகளை எடுத் ததன் பின் மீண்டும் அந்த மக்கள் அங்கே செல்கின்ற போது கைது செய்து நீதிமன்ற த்திற்கு அனுப்புகின்ற செயற் பாடுகள் இருக்க கூடாது என தெரிவித்தார். (4-6-299)

# டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி உயர்வு

(கொழும்பு)

அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 314.45 ஆகவும் விற்பனை விலை 327.82 ஆகவும் பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்து ள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபா யின் பெறுமதி அதிகரித்துள் ளது.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறு மதி 362.66 ஆக பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக் கது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 380 | 500 |
| தக்காளி | 220 | 260 | 240 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 240 | 200 | 280 |
| கோவா | 200 | 250 | 280 | 200 |
| கரட் | 350 | 500 | 500 | 500 |
| பூசணி | 120 | 120 | 120 | 120 |
| புடோல் | 80 | 80 | 120 | 150 |
| வாழைக்காய் | 180 | 200 | 150 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 150 | 160 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 100 | 80 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| பயற்றங்காய் | 300 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 250 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 180 | 150 | 200 |
| கறிமிளகாய் | 350 | 350 | 250 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 300 | 300 |
| போஞ்சி | 350 | 480 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 120 | 140 | 100 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2892

சிவர்சன்




விதுனா




லக்ஷி





தனு




மதுசன்




சதீஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறட்சியினால் வவுனியாவில் 450 குடும்பங்கள் பாதிப்பு

## அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவிப்பு

(குருமன்காடு)

**வறட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக வவுனியா மாவட்டத்தில் 450 குடும்பங்களைச் சேர்ந்த 1120 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஏ.எம்.ரூவான் ரட்நாயக்கா தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நிலவும் வறட்சி நிலைமை தொடர்பில் நேற்று வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வவுனியா மாவட்டத்தில் நிலவுகின்ற வறட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக இதுவரை 450 குடும்பங்களைச் சேர்ந்த 1120 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் அதிகமாக வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் பாதிப்புகள் உணரப்பட்டுள்ளது.

அந்த வகையில், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் வெடிவைத்தகல் கிராமத்தில் 450 குடும்பங்களைச் சேர்ந்த 1120 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், இவர்கள் குடிநீர் இல்லாமல் கஷ்டப்படுவதனால் குடிநீர் விநியோகத்திற்காக தற்போது குடிநீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றது எனவும் தெரிவித்தார். (நி-4-6-250)

# ஜப்பானின் நிதி உதவியில் முல்லை விவசாயிகளுக்கு உரம்



(முல்லைத்தீவு)

ஜப்பான் நாட்டின் உதவியின் கீழ் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் மூலம் பெரும் போக நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கான இலவச யூரியா வழங்கும் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு உட்பட்ட சுமார் 1500 விவசாயிகளில் முதற் கட்டமாக சுமார் 180 பயனாளிகளுக்கு நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

1.25 ஏக்கர் நிலப்பரப்புக்கு குறைவாக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயி ஒருவருக்கு 25 கிலோ கிராம் யூரியாவும் அதற்கு மேல் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயி ஒருவருக்கு 50 கிலோ கிராம் யூரியாவும் வழங்கி வைக்கப்பட்டது. (நி-4-6)

# நோய்த் தாக்கத்தால் சிகிச்சையின்றி உயிரிழக்கும் கால்நடைகள்

## முழங்காவில் கால்நடை பண்ணையாளர்கள் விசனம்



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்கு உட்பட்ட முழங்காவில் பகுதியில் கால்நடை வைத்தியர்களின் அசமந்த போக்கு காரணமாக வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்ட நான்கு கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் பகுதியில் வாழ்வாதார தேவைகளுக்காக வளர்க்கப்பட்ட சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான நல்லின பசு மாடுகள்நான்கு அடுத்தடுத்து உயிரிழந்துள்ளன. குறித்த பண்ணையாளர் ஒருவரது பசுமாடு நோய்வாய்ப்பட்ட நிலையில் கால்நடை வைத்தியரை குறித்த பண்ணையாளர் தொடர்பு கொண்டபோதும் வைத்தியர் விஜயம் செய்யாத நிலையில் குறித்த பசுமாடு உயிரிழந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து மறுநாள் அவரது மற்றைய பசுமாடும் அவ்வாறு நோய் வாய்ப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளது.


இதனைவிட அப்பிரதேசத்தை சேர்ந்த மேலும் இருபண்ணையாளர்களின் பசுமாடுகளும் இவ்வாறு நோய்வாய்ப்பட்ட நிலையில் எதுவித சிகிச்சைகளும் வழங்கப்படாத நிலையில் உயிரிழந்துள்ளன.

ஆனாலும் இவ்வாறு கால்நடைகள் உயிரிழந்தமைக்கான மருத்துவ ரீதியான ஆய்வுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பாக கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையினை தொடர்பு கொள்ள முற்பட்டபோதும் அலுவலகத்திலிருந்து உரிய பதில் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4-6-315)

# அம்பலப்பெருமாள் குளத்தை புனரமைத்து தாருங்கள்

## விவசாயிகள் கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப் பெருமாள் குளத்தினை புனரமைத்து தருமாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக்கிராமத்தில் 110 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. முழுமையாக விவசாயத்தினை நம்பியே இக்குடும்பங்கள் வாழ்கின்றன. இந்நிலையில் இக்கிராமத்தின் குளம் புனரமைக்கப்படாது காணப்படுகின்றது.

குளத்தின் அணைக்கட்டு பல இடங்களில் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இக்கிராமத்தில் கூட்டங்களை நடத்த வருகின்ற அதிகாரிகளிடம் குளத்தினை புனரமைத்து தாருங்கள் என கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக கோரிக்கைகள் விடுக்கப்பட்ட நிலையில் சிறிய வேலைகள் குளத்தில் இடம்பெற்றிருந்தாலும் முழுமையான வேலைகளை முன்னெடுப்பதற்கு நிதி கிடைக்கவில்லை என அதிகாரிகள் தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றனர். 600 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொள்ளக் கூடிய நிலைமை காணப்பட்டாலும் தற்போது குளம் புனரமைக்கப்படாததன் காரணமாக 450 ஏக்கர் வரையான நிலப்பரப்பிலேயே விவசாயம் மேற்கொள்ளப்படுகின்றது.

குளத்தினை புனரமைத்து முழுமையான விவசாய நடவடிக்கைக்கு அதிகாரிகள் உதவ வேண்டும் எனவும் அக்கிராம விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-4-6-350)

# காடழிப்பு, மணல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு பேர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத காடழிப்பு மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வு ஆகிய குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்ட நான்கு பேர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தேசிய பறவைகள் பூங்கா சுண்டிக்குளம் பகுதியில் ஜே.சி.பி இயந்திரம் மூலம் காடழிப்பில் ஈடுபட்ட ஒருவரும், அனுமதிப் பத்திரமின்றி மூன்று உழவியந்திரங்களில் மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி வனஜீவராசிகள் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே இந்த நான்கு பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நான்கு பேரையும் சான்றுப் பொருட்களுடன் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (நி-4-6-316)

# சான்றுப் பொருட்களை பெற்றுக் கொள்ளவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் AR/815/23, AR/816/23, AR/817,23 ஆகிய வழக்கு இலக்கங்களின் கீழ் உள்ள 3 மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்கள் யாராவது இருந்தால் தகுந்த ஆதாரத்தை காட்டி பெற்றுக் கொள்ளவும்.

அவ்வாறு உரிமை கோரப்படாத பட்சத்தில் எவ்வித முன் அறிவித்தலும் இன்றி சான்றுப் பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-4)

### அக்கராயன் சந்தியில்

# மலசலகூட வசதியினை ஏற்படுத்தி தருமாறு பொதுஅமைப்புகள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் சந்தியில் மலசலகூட வசதியினை ஏற்படுத்துவதற்கு கரைச்சி பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொதுஅமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உபநகரமாக உள்ள அக்கராயனில் பொலிஸ் நிலையம், எரிபொருள் நிலையம், கமநல சேவை நிலையம் உட்பட வர்த்தக நிலையங்கள் பல காணப்படும் நிலையில் நாள்தோறும் இவ் நகரத்திற்கு பெருமளவு மக்கள் வருகை தரும் நிலையில் பொது மலசலகூடம் இல்லாததன் காரணமாக பொது மக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் கரைச்சி பிரதேச சபையினர் மலசலகூட வசதியினை உருவாக்கி பொது மக்களின் பயன்பாட்டிற்கு கையளிக்க வேண்டும் என பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (நி-4-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 258





'ஐயோ! என்ன பயங்கரமான வார்த்தைகளைச் சொல்கிறாய்?' என்றேன். 'காயமடைந்து படுத்துக் கிடந்த பாண்டியனை என் கண் முன்னால் கொன்றது பயங்கரமான காரியமில்லையா?' என்று நந்தினி கேட்டாள். இதனால் என் குரோதம் கொழுந்து விடத் தொடங்கியது. ஏதேதோ வெறி கொண்ட வார்த்தைகளை உளறி அவளை நிந்தித்துவிட்டுக் கிளம்பினேன். அப்போதும் அவள் என்னை விடவில்லை. 'இளவரசே! எப்போதாவது தங்களுடைய மனத்தை மாற்றிக் கொண்டால் என்னிடம் திரும்பி வாருங்கள். என்னைச் சக்கரவர்த்தினியாக்கிக் கொள்ளத் தங்கள் மனம் இடம் கொடுக்கும் போது வாருங்கள்!' என்றாள். அன்று அவளை விட்டுப் பிரிந்தவன் பிறகு அவளைப் பார்க்கவே இல்லை!' என்றான் ஆதித்த கரிகாலன்.

இதையெல்லாம் கேட்டுப் பயங்கரமும் திகைப்பும் அடைந்த பார்த்திபேந்திரன், "அரசே! இப்படியும் ஒரு ராட்சஷி உலகில் இருக்க முடியுமா? அவளைத் தாங்கள் மறுபடி சந்திக்காததே நல்லதாய்ப் போயிற்று!" என்று கூறிப் பெருமூச்சு விட்டான்.

"அவளை நான் போய்ப் பார்க்கவில்லை என்பது சரிதான்! ஆனால் அவள் என்னை விட்டபாடில்லை. பல்லவா! இரவும் பகலும் என்னைச் சுற்றிச் சுற்றி வந்து என்னை வதைக்கிறாள். பகலில் நினைவிலே வருகிறாள். இரவில் கனவிலே வருகிறாள். ஒரு சமயம் முகத்தில் மோகனப் புன்னகையுடன் என்னைக் கட்டி அணைத்து முத்தம் கொடுக்க வருகிறாள். இன்னொரு சமயம் கையில் கூரிய கத்தியுடன் என்னைக் குத்திக் கொல்ல வருகிறாள். ஒரு சமயம் கண்களில் கண்ணீர் பெருக்கி விம்மிக் கொண்டு வருகிறாள். வேறொரு சமயம் தலைவிரி கோலமாய்க் கன்னங்களைக் கை விரல்களினால் பிறாண்டிக் கொண்டும் அலறி அழுது கொண்டும் வருகிறாள். ஒரு சமயம் பைத்தியம் பிடித்தவளைப் போல் பயங்கரமாய்ச் சிரித்துக் கொண்டும் வருகிறாள். இன்னொரு சமயம் அமைதியான முகத்துடன் ஆறுதல் சொல்ல வருகிறாள். கடவுளே! அந்தப் பாதகி என்னை எப்படித்தான் வதைக்கிறாள் என்று சொல்லி முடியாது. இன்று மாலை பாட்டன் கூறியது நினைவிருக்கிறதா! நான் ஏன் தஞ்சை போகக் கூடாது என்பதற்கு ஏதேதோ காரணம் கூறினார். உண்மையில் நான் தஞ்சை போகாமலிருப்பதற்கும் என் தந்தையைக் காஞ்சிக்கு வரவழைக்க விரும்புவதற்கும் காரணம் நந்தினிதான்."

"அரசே! கேவலம் ஒரு பெண்ணுக்குப் பயந்து கொண்டா தஞ்சைக்குப் போகாமலிருக்கிறீர்கள்? அப்படி அவள் என்ன தான் செய்து விடுவாள்? வஞ்சனையாக விஷம் வைத்துத் தங்களைக் கொன்று விடுவாள் என்று அஞ்சுகிறீர்களா?."

"இல்லை, பார்த்திபா, இல்லை! இன்னமும் என்னை நீ நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை. அவள் என்னைக் கொன்று விடுவாள் என்பதற்காக நான் அஞ்சவில்லை. அவளுடைய இஷ்டப்படி என்னைச் செய்ய வைத்து விடுவாளோ என்றுதான் பயப்படுகிறேன்.

'உன் தந்தையைச் சிறையில் போடு!' 'உன் தங்கையை நாட்டை விட்டுத் துரத்து!' 'இந்தக் கிழவனைக் கொன்று என்னை சிம்மாசனத்தில் ஏற்று!' என்று அந்த மாயமோகினி மறுமுறை சொன்னால், எனக்கு அப்படியெல்லாம் செய்யத் தோன்றிவிடுமோ என்று பயப்படுகிறேன்.

நண்பா! ஒன்று நந்தினி சாக வேண்டும் அல்லது நான் சாக வேண்டும் அல்லது இரண்டு பேரும் சாக வேண்டும். இல்லாவிடில் இந்த ஜன்மத்தில் எனக்கு மன அமைதி கிடையாது!" என்றான் கரிகாலன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பாடாதே செத்தேன்



ஓர் ஊரில் செல்வன் ஒருவன் இருந்தான். வெளியூரில் இருந்து வந்த ஒருவன் அவனிடம் வேலைக்காரனாகச் சேர்ந்தான்.

கள்ளம் கபடம் இல்லாத அந்த வேலைக்காரன் உண்மையாக உழைத்தான். செல்வன் அவனுக்குக் கூலி எதுவும் தரவில்லை.

மூன்றாண்டுகள் கழிந்தன. செல்வனைப் பார்த்து அவன் ஐயா என் சொந்த ஊருக்குச் செல்ல விரும்புகிறேன். எனக்குச் சேர வேண்டிய கூலியைத் தாருங்கள் என்று கேட்டான்.

கருமியான அந்தச் செல்வன் அவனை ஏமாற்ற நினைத்தான். தன் பையிலிருந்து மூன்று செப்புக் காசுகளை எடுத்து அவனிடம் தந்தான்.

நீ என்னிடம் மூன்று ஆண்டுகள் உழைத்தாய். ஒவ்வோர் ஆண்டிற்கும் ஒரு காசு கூலி என்றான் செல்வன்.

வேலைக்காரனுக்குப் பணத்தின் மதிப்பு ஏதும் தெரியாது. நன்றி ஐயா! என்று சொல்லிவிட்டு மகிழ்ச்சியுடன் புறப்பட்டான்.

காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தான். அவன் எதிரில் ஒரு குள்ளன் வந்தான்.

அந்தக் குள்ளன் இரண்டடி உயரமே இருந்தான். அவனின் நீண்ட வெள்ளைத் தாடி தரையில் புரண்டது தலையில் பல வண்ணத் தொப்பி அணிந்து இருந்தான். வேடிக்கையான தோற்றத்துடன் காட்சி அளித்தான் அவன்.

எதிரில் வந்தவனைப் பார்த்துக் குள்ளன், ஐயா! நான் ஏழை, குள்ளனாக இருப்பதால் யாரும் எனக்கு வேலை தருவது இல்லை. பசியாலும் பட்டினியாலும் வாடுகிறேன். என் மீது இரக்கப்பட்டு ஏதேனும் உதவி செய்யுங்கள் என்று கெஞ்சினான்.

உன்னைப் பார்த்தால் பரிதாபமாக உள்ளது. நான் மூன்றாண்டுகள் கடுமையாக உழைத்ததற்குக் கிடைத்த கூலி இது. இதை நீ வைத்துக் கொண்டு மகிழ்ச்சியாக இரு. எனக்கு வலிமை இருக்கிறது. மீண்டும் உழைத்து என்னால் பொருள் ஈட்ட முடியும் என்று சொல்லி விட்டுத் தன் பையில் கை விட்டான். மூன்று செப்புக் காசுகளை எடுத்துக் குள்ளனிடம் தந்தான்.

அதை பெற்றுக் கொண்ட குள்ளன், நீ நல்லவன் உன்னிடம் ஏழைக்கு இரக்கப்படும் பண்பு உள்ளது. மூன்று காசுகளை என்னிடம் தந்து உள்ளாய். என்னால் எதுவும் செய்ய முடியும். உன் மூன்று விருப்பங்களைச் சொல். எப்படிப்பட்டதாக இருந்தாலும் உடனே நிறைவேற்றி வைக்கிறேன் என்றான்.

சிந்தனையில் ஆழ்ந்த அவன் குறி வைத்தால் குறி தப்பவே கூடாது. அப்படிப்பட்ட வில்லும் அம்புகளும் தேவை. நான் புல்லாங்குழலை இசைத்தால் கேட்பவர் யாராக இருந்தாலும் ஆட வேண்டும் அத்தகைய புல்லாங்குழல் தேவை. நான் எதைக் கேட்டாலும் மற்றவர்கள் அதை மறுக்கக் கூடாது. இதுவே என் மூன்று விருப்பங்கள் என்றான்.

அடுத்த நொடியே குள்ளனின் கையில் வில்லும் அம்புகளும் புல்லாங்குழலும் இருந்தன. அவற்றை அவனிடம் தந்தான் குள்ளன். உன் விருப்பங்கள் நிறைவேறும் போய் வா என்றான்.

குள்ளனை வணங்கி விட்டு மகிழ்ச்சியுடன் புறப்பட்டான் அவன். சிறிது தூரம் சென்றிருப்பான்.

அங்கே ஒரு திருடன் கையில் பொற்காசுப் பையுடன் நின்று இருந்தான். அருகே இருந்த மரத்தில் ஒரு பறவை கத்திக் கொண்டிருந்தது.

இந்தப் பறவை மட்டும் என் கையில் கிடைத்தால் போதும். என் பசிக்கு நல்ல உணவாகும். என்ன செய்வேன்? அதை அடித்து வீழ்த்த வில்லோ அம்புகளோ என்னிடம் இல்லையே, என்று சொல்லிக் கொண்டு இருந்தான் திருடன். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மிடமுள்ள குறைகளை நீக்கிக் கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிர்ஷ்டம் ஆகும்.

~ கதே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மகத்துவத்தை உணரமுடியாதவர்களால் மருத்துவ சேவை பட்டலைகிறது

பிறந்து பத்து நாட்களேயான குழந்தைக்கு சிகிச்சையளிப்பதற்கு மறுப்புத் தெரிவித்த வவுனியா பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்களின் செயல் பலரதும் விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளது.

பொதுவில் மருத்துவ சேவை என்பது இறைவனுக்கு ஒப்பானது. ஆயினும் அந்த சேவையில் இருப்பவர்கள் அதன் ம்கிமையை உணராமல் இருப்பது மிகவும் வேதனைக்குரியது.

தவிர, மருத்துவ சேவையில் ஈடுபடுபவர்களின் கஷ்ட துன்பங்களையும் அவர்களின் பிரச்சினைகளையும் உணராமல் பொதுமக்கள் சிலர் நடந்து கொள்வதும் க்வலைக்குரியது. உண்மையில் மருத்துவ சேவை என்பது உயிர்காக்கும் பணி.

இங்கு அன்பும் இரக்கமும் பணிவும் பொறுமையும் இறை நம்பிக்கையும் மிகவும் அவசியமானது.

மேற்குறித்த பண்புகளில் இருந்து விலகக்கூடிய எவரும் மருத்துவ சேவைக்குப் பொருத்தமற்றவர்கள்.

அதேநேரம் பொதுமக்களில் சிலர் தங்களை மிக உயர்ந்தவர்களாகக் கற்பனை செய்து கொண்டு, தாங்கள் நினைத்தால் எதுவும் செய்ய முடியும் என்ற நினைப்பில் ஏறுமாறாகக் கதைக்கின்றனர்.

இத்தகையவர்கள் தங்களின் செல்வாக்குக் கர்வத்தை வைத்தியசாலைப் பணியாளர்களிடம் காட்டுகின்றபோது அங்கு முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

இருந்தும் பொதுமக்கள் அன்பாகப் பண்பாகப் பழகினாலும் அதனைப் பொருட்படுத்தாமல், தாங்கள் நினைத்தால் மட்டுமே எதுவும் செய்ய முடியும் என்ற கர்வத்தோடு கடமையாற்றுகின்ற மருத்துவர்களும் தாதியர்களும் இதர சுகாதாரப் பணியாளர்களும் மருத்துவ சேவையில் உள்ளனர் என்ற உண்மையையும் ஒருபோதும் நிராகரிக்க முடியாது.

அதேநேரம் தெய்வத்துக்கு நிகரானவர்கள் என்று நோயாளர்களும் பொதுமக்களும் கையெடுத்து வணங்குகின்ற மருத்துவர்களும் தாதியர்களும் இணைந்த மருத்துவ சேவையாளர்களும் பணியாளர்களும் உள்ளனர் என்ற உண்மையை இவ்விடத்தில் கூறாவிடில் அது மிகப் பெரும் பாவச் செயல்.

இவ்வாறாக முரண்பாடு கொண்டவர்களும் இயற்கையிலேயே ஆணவச் செருக்குடையவர்களும் கோபக் குணமும் சண்டித்தன இயல்பும் கொண்டவர்களும் மருத்துவ சேவையிலும் பொதுமக்கள் தரப்பிலும் இருப்பதன் காரணமாக வில்லங்கம் இடம்பெறவே செய்கிறது.

எதுவாயினும் உயிர்காக்கும் பணியில் எவரும் வில்லங்கம் செய்ய நினைத்தால், அதைவிட்ட நஞ்சுத்தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

அதேநேரம் புனிதமான மருத்துவ சேவையில் இருக்கக்கூடிய மருத்துவர்கள் தங்கள் பணியை செம்மையாகச் செய்யும்போது, அவர்களுடன் இணைந்து கடமையாற்றும் ஏனைய மருத்துவ சேவையாளர்கள் நிச்சயம் தங்களின் தொழில் மாண்பை பேணிப் பாதுகாப்பர்.

மாறாக, மருத்துவர்கள் தம் பணியில் நின்று விலகுவார்களாயின், அதன் பின்னர் அவர்களின் வார்த்தைகளுக்கு தாதியர்களோ அன்றி இதர பணியாளர்களோ மதிப்பளிக்க மாட்டார்கள் என்ற உண்மையையும் இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

# இனவாதம், மதவாதம் தூண்டுபவர்களை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும்

## வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

இனவாதம்,மதவாதம் தூண்டி நாட்டைக் குழப்புபவர்களை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டின் சுதந்திரத்துக்காக அனைத்து இன மக்களும் ஒன்றாக இருந்து செயற்பட்டதுபோல் தற்போது நாட்டின் பொருளாதாரத்தை மீட்கவும் நாங்கள் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும்.

நாட்டின் சுதந்திரத்துக்காக ஒன்றிணைந்து செயற்பட்டாலும் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக அரசியல் கட்சிகள் காலத்துக்கு காலம் தேர்தல்களின்போது பொய் வாக்குறுதிகளை வழங்கி அதனை செயற்படுத்த முற்பட்டதன் பிரதிபலனாகவே இன்று நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட காரணமாகும்.

மேலும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்துக்கு வந்து பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவ்டிக்கை எடுத்து வந்திருக்கிறார்.

பொருளாதாரம் ஸ்திரமடையும் நிலை ஏற்படும் போது இனவாதத்தை தூண்டி, ஆட்சியை வீழ்த்தும் நடவடிக்கை 2000 ஆம் ஆண்டில் இருந்து இடம்பெற்று வந்திருக்கிறது. அதனால் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதையும் அதனை எவ்வாறு மீட்கமுடியும் என்பதையும் அரசியல் அனுபவத்தால் ரணில் விக்கிரமசிங்க தெரிந்து வைத்திருக்கிறார்.

அதனால் தான் 2000 ஆம் ஆண்டில் நாடு வீழ்ச்சியடையும்போது 2001 டிசம்பர் மாதம் நாட்டை பொறுப்பேற்று, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நாட்டை முன்னுக்கு கொண்டு சென்றார்.

ஆனால் மீண்டும் இனவாதத்தை தூண்டி நாட்டில் பிரச்சினையை ஏற்படுத்திய நிலையில் 2014 ஆகும்போது நாடு பொருளாதார ரீதியில் மீண்டும் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது.

அதனால் 2017இல் நடத்த இருந்த ஜனாதிபதி தேர்தலை 2015இல் நடத்தி அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முயற்சித்தார்கள். என்றாலும் 2015 ஜனவரி 8 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நாட்டை பொறுப்பேற்று, நாட்டை முன்னுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்து வந்தார்.

இந்நிலையில்தான், உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் ஒன்றிணைந்து 2019 இல் 52 நாள் கலவரம் மற்றும் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் வரை இடம் பெற்றது.

எனவே நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் அதனை மீட்டு, நாட்டை கட்டியெழுப்ப அரசியல் கட்சிகளுக்கு வேலைத்திட்டம் இருக்குமானால் அவர்கள் தற்போதாவது முன்வைத்திருக்கலாம். ஆனால் அவர்களிடம் எந்த வேலைத் திட்டமும் இல்லை.

ஆனால் இவர்கள் இனவாதம், மாதவாதத்தை தூண்டி நாட்டை குழப்பும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். அதனை மக்கள் தடுக்க வேண்டும். இனவாதம் மதவாதத்தை தூண்டுவதை கட்டுப்படுத்த முடியாமல் போனால் இலங்கைக்கு எதிர்காலம் இல்லாமல் போகும்.

அதனால் அனைவரும் இலங்கையர்களாக எமது பிரச்சினைகளை எமது நாட்டுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு தேசிய ஐக்கியம் முக்கியமாகும் என்றார். (ம-7)

### சென்னை விமான நிலையத்தில்

## அத்து மீறி நுழைந்த யாழ். இளைஞனால் பரபரப்பு

(சென்னை)

சென்னை விமான நிலையத்துக்குள் 7 அடுக்கு பாதுகாப்பையும் மீறி விமான டிக்கெட் இல்லாமல் சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞனை அதிகாரிகள் மடக்கிப்பிடித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சென்னை விமான நிலையத்தில் சுதந்திர தினத்தை முன்னிட்டு உச்சகட்ட 7 அடுக்குபாதுகாப்பு முறை உள்ளது. இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு இளைஞர் ஒருவர் விமானடிக்கெட், சிறப்பு அனுமதிபாஸ்எதுவும் இல்லாமல் விமான நிலையத்தின் பாதுகாப்பு சோதனை, சுங்கச் சோதனை ஆகிய பகுதிகளைக் கடந்து, குடியுரிமை சோதனை நடக்கும் கவுன்ட்டர் பகுதி வரை சென்று அங்கு சுற்றிக் கொண்டிருந்தார்.

இரவு 10 மணி அளவில் குடியுரிமை அலுவலக கவுன்டர் பகுதியில் ஊழியர் ஒருவரின் கையடக்க தொலைபேசியை திருட முயன்றுள்ளார். இதையடுத்து, அந்த இளைஞரைப் பிடித்த அதிகாரிகள்விமான நிலையமேலாளர் அறையில் ஒப்படைத்துள்ளனர்.

விசாரணையில், அவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 35 வயதுடைய இளைஞன் என்பதும் 3 மாத விசாவில் இலங்கையிலிருந்து சென்னை வந்திருப்பதும் தெரியவந்தது. குறித்த நபரிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. (ம-7)

## மின்சார வேலியில் சிக்கி குடும்பப் பெண் பலி

(பதுளை)

காட்டு யானைகளுக்காக போடப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பதுளை - ஹல்துமுல்லை பகுதியில் நேற்று புதன்கிழமை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஹல்துமுல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் மின்சார வேலியில் தவறுதலாக சிக்கியதால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஹல்துமுல்லை பகுதியை சேர்ந்த 60 வயதுடைய 2 பிள்ளைகளின் தாயார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மனித உடலின் 423 உள் உறுப்புக்களின் பெயர் கூறி

### 8 வயது மாணவி சாதனை

(கொழும்பு)

மனித உடலிலுள்ள 423 உள் உறுப்புகளின் பெயர்களை 4 நிமிடங்களில் கூறி பொகவந்தலாவையைச் சேர்ந்த கனிஷிகா என்ற 8 வயது பாடசாலை மாணவி சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

பொகவந்தலாவையைச் சேர்ந்த சங்கரதாஸ் மற்றும் பாமினி தம்பதிகளின் மகளான இவர் பொகவந்தலாவை ஹொலி ரோசரி மகா வித்தியாலயத்தில் 2 ஆம் தரத்தில் கல்வி கற்று வருகிறார்.

இந்த உலக சாதனை நிகழ்வு நேற்று பொகவந்தலாவை ஹொலி ரோசரி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போது குறித்த மர்ணவி உடல் உள் உறுப்புகளின் பெயர்களை விரைவாக கூறினார்.

இதற்கமைய, உலகில் அதிக நினைவாற்றல் கொண்ட சிறுமிகளின் பட்டியலில் இலங்கை மாணவி கனிஷிகாவும் இணைந்துள்ளார். (ம-7)

## கிணற்றில் தவறி விழுந்த 5 வயது சிறுமி உயிரிழப்பு

(மாத்தறை)

மாத்தறை - கம்புறுபிட்டிய பிரதேசத்தில் கிணற்றில் தவறி விழுந்து 5 வயது சிறுமி உயிரிழந்துள்ளார்.

இந்தச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

குறித்த சிறுமி முன்பள்ளிக்குச் செல்வதற்காகக் குளித்துக் கொண்டிருந்த போதே கிணற்றில் தவறி விழுந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தை மீட்ட பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக கம்புறுபிட்டிய வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் உயிரிழந்த சிறுமியின் பெற்றோரிடம்வாக்குமூலங்களைப் பெற்ற பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

08

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



அமெரிக்க டொலரை உலகின் வலிமையான நாணயமாக பெரும்பாலான மக்கள் நம்புகிறார்கள். ஆனால் உலக நில்வரத்தின்படி டொலர் 10 ஆவது வலுவான நாணயமாகவே தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. குவைத் தினார் நாணயமே வலுவான நாணயமாக மதிப்பிட்டுள்ளது. அதேநேரத்தில் பிரிட்டிஷ் பவுண்டு மற்றும் யூரோ முறையே ஐந்தாவது மற்றும் எட்டாவது இடங்களைப் பெற்றுள்ளன. உலக நாடுகளின் வெளிநாட்டுச் செலாவணி இருப்புகள் அட்டவணை A யில் தரப்பட்டுள்ளன.

**அமெரிக்க டொலர் உலகளாவிய நாணயமாக இருப்பது ஏன்?**

அமெரிக்க நாணய மதிப்பான டொலர், "உலகளாவிய நாணயம்" என்ற அடையாளத்தை பெற்றுள்ளது. டொலர் மற்றும் யூரோ- சர்வதேச வர்த்தகத்தில் மிகவும் பிரபலமானவை மற்றும் ஏற்றுக் கொள்ளப்படுபவை. உலகெங்கிலும் உள்ள மத்திய வங்கிகள் வைத்திருக்கும் அந்நிய செலாவணி இருப்பில் 74 சதவிகிதம், அமெரிக்க டொலர்களாகும்.

பொதுவான சூழ்நிலையில், டொலரே உலகளாவிய நாணயமாக உள்ளது. இது, அதன் வலிமை மற்றும் அமெரிக்க பொருளாதார பலத்தின் அடையாளமாகும்.

சர்வதேச தர நிர்ணய அமைப்பின் பட்டியலின்படி, உலகளவில் 185 நாணயங்கள் உள்ளன. இருப்பினும், இந்த நாணயங்களில் பெரும்பாலானவை, தனது நாட்டிற்குள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. உலகெங்கிலும் ஒரு நாணயம் எத்தனை பிரபலமாக உள்ளது என்பது, அந்த நாட்டின் பொருளாதாரம் மற்றும் வலுவை பொறுத்தது.

உலகின் இரண்டாவது சக்தி வாய்ந்த நாணயம் யூரோ. உலகெங்கிலும் உள்ள மத்திய வங்கிகளின் அந்நிய செலாவணி இருப்புகளில் 19.9 சதவீதம் யூரோ ஆகும்.

டொலரின் வலிமை மற்றும் அங்கீகாரம், அமெரிக்க பொருளாதாரத்தின் வலிமையை பிரதிபலிக்கிறது என்பது அனைவரும் அறிந்ததே. மொத்த டொலரின் 75 சதவீதம், அமெரிக்காவிற்கு வெளியே பயன்படுத்தப்படுகிறது.

உலகளவில் 85 சதவிகித வர்த்தகத்தில் டொலரின் ஆதிக்கம் உள்ளது. உலகில் 39 சதவிகித கடன்கள், டொலர்களில் கொடுக்கப்படுகிறது. ஆகவே, வெளிநாட்டு வங்கிகளுக்கு, சர்வதேச வர்த்தகத்திற்கு டொலர்கள் தேவை.

**அட்டவணை-A**

| | நாடு அல்லது பிரதேசம் | வெளிநாட்டுச் செலாவணி இருப்புகள் (மில்லியன் - $) | தரவுத் திகதி | | நாடு அல்லது பிரதேசம் | வெளிநாட்டுச் செலாவணி இருப்புகள் (மில்லியன் -$) | தரவுத் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 3,371,823 | May-23 | 23 | கனடா | 106,462 | Nov-22 |
| 2 | ஜப்பான் | 1,254,522 | May-23 | 24 | பிலிப்பைன்ஸ் | 101,296 | May-23 |
| 3 | சுவிட்சர்லாந்து | 898,006 | May-23 | 25 | துருக்கி | 97,080 | May-23 |
| 4 | இந்தியா | 609,022 | Jul-23 | 26 | வியட்நாம் | 92,101 | Aug-22 |
| 5 | ரஷ்யா | 594,400 | Jul-23 | 27 | ஈரான் | 86,000 | Feb-20 |
| 6 | தைவான் | 562,870 | May-23 | 28 | நார்வே | 70,287 | Jun-22 |
| 7 | தென் கொரியா | 421,454 | Jun-23 | 29 | லிபியா | 69,114 | Mar-22 |
| 8 | ஹாங்காங் | 421,007 | May-23 | 30 | தென் ஆப்பிரிக்கா | 61,296 | May-23 |
| 9 | சவூதி அரேபியா | 404,470 | Apr-23 | 31 | ஆஸ்திரேலியா | 57,889 | Dec-22 |
| 10 | பிரேசில் | 341,158 | Mar-23 | 32 | ஸ்வீடன் | 54,020 | Mar-21 |
| 11 | சிங்கப்பூர் | 317,200 | Jun-23 | 33 | நெதர்லாந்து | 54,016 | May-21 |
| 12 | ஜெர்மனி | 277,458 | Nov-22 | 34 | குவைத் | 48,895 | May-22 |
| 13 | அமெரிக்கா | 242,731 | Mar-23 | 35 | பங்களாதேஷ் | 24,753 | Jun-23 |
| 14 | பிரான்ஸ் | 238,277 | Oct-22 | 36 | நியூசிலாந்து | 14,544 | Dec-21 |
| 15 | தாய்லாந்து | 225,486 | Jan-23 | 37 | லெபனான் | 12,500 | Dec-21 |
| 16 | இத்தாலி | 211,308 | Nov-22 | 38 | நேபாளம் | 10,940 | May-23 |
| 17 | மெக்சிகோ | 204,130 | Jul-23 | 39 | புருனே | 3,664 | Feb-21 |
| 18 | இஸ்ரேல் | 201,895 | Apr-23 | 40 | இலங்கை | 3,483 | May-23 |
| 19 | ஐக்கிய இராச்சியம் | 182,790 | Nov-22 | 41 | பாகிஸ்தான் | 8,727 | Jul-23 |
| 20 | இந்தோனேசியா | 140,311 | Feb-23 | 42 | பூட்டான் | 970 | 2022 |
| 21 | ஐக்கிய அரபு நாடுகள் | 115,725 | Sep-22 | 43 | மாலத்தீவுகள் | 762 | 2018 |
| 22 | மலேசியா | 111,400 | Jun-23 | | | | |

டொலரைச் சார்ந்திருப்பதைக் குறைக்க ரஷ்யாவும் சீனாவும் ஒன்றிணைந்து வருகின்றன. இது இரு நாடுகளுக்கும் இடையில் ஒரு 'நிதி கூட்டணிக்கு' வழிவகுக்கும் என்று சில நிபுணர்கள் கூறுகின்றனர்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் உக்ரைன்-ரஷ்யா போரின் விளைவாக மேற்கத்தேய நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடையை விதித்திருந்தன. அதற்கு பதிலடி கொடுக்கும் முகமாக ரஷ்யா தன்னுடன் வர்த்தகம் செய்பவர்கள் தனது நாணயமான ரூபிளில் வர்த்தகம் செய்ய வேண்டும் என்று அறிவித்திருந்தது. ரஷ்யா எரிபொருள் ஏற்றுமதி செய்யும் ஒரு நாடாகும்

**அமெரிக்க டொலர் எப்போது உலகளாவிய நாணயமாக மாறியது**

1944 ஆம் ஆண்டு, பிரெட்டன் உட்ஸ் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து டொலரின் நடப்பு வலுவடைதல் ஆரம்பமானது. அதற்கு முன், பெரும்பாலான நாடுகள் தங்கத்தை மட்டுமே சிறந்ததாகக் கருதின. அந்த நாடுகளின் அரசுகள் தங்கத்தின் தேவையின் மதிப்பின் அடிப்படையில், தங்கள் நாணயத்தை முடிவு செய்வதாக உறுதியளித்தன.

நியூ ஹாம்ஷயரின், பிரெட்டன் வூட்ஸில் உலகின் வளர்ந்த நாடுகள் கூடி, அமெரிக்க டொலருக்கு எதிரான அனைத்து நாணயங்களின் பரிமாற்ற வீதத்தை நிர்ணயித்தன. அந்த நேரத்தில், உலகின் மிக அதிக தங்க இருப்பு அமெரிக்காவிடம் இருந்தது. தங்கத்திற்கு பதிலாக, டொலரின் மதிப்பிற்கு ஏற்ப தங்கள் நாணயத்தை முடிவு செய்ய, இந்த ஒப்பந்தம் மற்ற நாடுகளுக்கு அனுமதி அளித்தது.

1970 களின் முற்பகுதியில், பல நாடுகள் டொலருக்கு பதில் தங்கம் கோரத் தொடங்கின. ஏனெனில் பணவீக்கத்தை எதிர்த்துப் போராட இது தேவைப்பட்டது. அந்த நேரத்தில், அமெரிக்காவின் ஃபோர்ட் நாக்ஸ் (தங்க காப்பகம்) தனது தங்கத்தின் இருப்புக்களை கலைக்க அனுமதிப்பதற்கு பதிலாக டொலரை தங்கத்திலிருந்து பிரித்தார் அதிபர் நிக்சன். அதாவது அவர் தங்கத்திற்கும் டொலருக்கும் இருந்த தொடர்பை வேறுபடுத்தினார். இவ்வாறு செய்த போதும் டொலர் உலகின் மிகவும் பாதுகாப்பான நாணயமாக மாறி விட்டது.

**பிரெட்டன் வூட்சு முறைமை (Bretton Woods system)**

பிரெட்டன் வூட்சு முறைமை (Bretton Woods system) இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி காலத்தில் உலகின் பெரும் முன்னேற்றமடைந்த நாடுகளில் வணிக மற்றும் பொருளியல் தொடர்புகளுக்காக ஏற்படுத்தப்பட்ட விதிகளை நிலைநிறுத்தும் நிதி மேலாண்மை முறைமையாகும். தன்னாட்சி பெற்ற நாடுகளிடையே முற்றிலும் கலந்துரையாடி ஏற்படுத்தப்பட்ட நிதி மேலாண்மை அமைப்பிற்கு பிரெட்டன் வூட்சு முறைமை ஓர் முதல் எடுத்துக்காட்டாகும்.

பிரெட்டன் வூட்ஸ் உடன்படிக்கையானது தங்கத்தை உலகளாவிய தரநிலையாகப் பயன்படுத்தி (gold as the universal standard) நிலையான நாணய மாற்று வீதத்தை உருவாக்கக்கூடிய ஒரு அமைப்பை நிறுவியது

இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருக்கும்போதே பன்னாட்டு பொருளாதார அமைப்புகளை வலுப்படுத்தி மீளமைக்க 44 நேச நாடுகளைச் சேர்ந்த 730 பேராளர்கள் அமெரிக்காவின் நியூ ஹாம்சயரில் பிரெட்டன் வூட்சு நகரிலுள்ள மவுண்ட் வாஷிங்டன் தங்குவிடுதியில் ஐக்கிய நாடுகள் செலாவணி மற்றும் நிதி மாநாட்டில் பங்கேற்று உரையாடினர்.

1944ஆம் ஆண்டு யூலை மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் இவர்களின் கலந்துரையாடலின் பயனாக கையெழுத்தானதே பிரெட்டன் வூட்சு உடன்பாடுகள்.

பன்னாட்டுச் செலாவணி அமைப்பை கட்டுப்படுத்த வேண்டிய விதிகள், அமைப்புகள் மற்றும் செயல்முறைகளை நிறுவிட பிரெட்டன் வூட்சு திட்டவியலாளர்கள், தற்போது உலக வங்கிக் குழுமத்தின் அங்கங்களாக உள்ள, பன்னாட்டு நாணய நிதியம் (IMF) மற்றும் பன்னாட்டு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி (IBRD) ஆகியவற்றை உருவாக்கினர். இவை தேவையான அளவில் நாடுகள் ஏற்புறுதி வழங்கிபின் 1945ஆம் ஆண்டிலிருந்து செயலாற்றத் தொடங்கின.

பிரெட்டன் வூட்சு முறைமையின் முதன்மை சிறப்புக்கூறுகளாக ஒவ்வொரு உடன்பட்ட நாடும் தங்கள் நாணயக் கொள்கையை டொலருடன் இணைத்த நாணய மாற்று வீதம் இருக்குமாறு அமைத்துக் கொள்வதை கட்டாயமாக்குவதும் பன்னாட்டு நாணய நிதியம் தற்காலிக கையிருப்புத் துண்டை சரிசெய்ய கடன் தருவதுமாகும்.

வியட்நாம் போர் காலத்தில் அமெரிக்காவைச் சந்தையில் காகிதப் பணத்தால் நிரப்பியது. இதனால் டொலரின் ஸ்திரத்தன்மை பற்றிய கவலைகள் அதிகரித்து வந்ததால் நாடுகள் டொலர் இருப்புக்களை தங்கமாக மாற்றத் தொடங்கின.

இதை தொடர்ந்து ஒகஸ்ட் 15, 1971 அன்று ஐக்கிய அமெரிக்கா யாருடனும் கலந்துரையாடாது தன்னிச்சையாக தனது டொலரை தங்கத்திற்கு மாற்றக்கூடிய தன்மையை விலக்கிக் கொண்டது. இதனால் பிரெட்டன் வூட்சு முறைமை முடிவிற்கு வந்தது.

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருவேறு...

ஒருவர் பலியானார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் நாக்குளுகமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் நாக்குளுகமுவ பகுதியைச் சேர்ந்த 35 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உந்துருளியில் பயணித்த இருவர் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, திக்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போதகந்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை என பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திக்வெல்ல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7)


மெகா பவர்
திகதி 16/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1556
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
I 12 09 55 63 75
70815

தன நிதானய
திகதி - 2023.08.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1238
I 23 39 47 55 I
29152

Lucky 7
திகதி 16.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0034
L7 இலக்கம் 1 2
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
இடபம் 2 0 1 1 9 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3450
சீட்டிழுப்பு திகதி 16.08.2023
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Q 09 45 54 65
Q 61789

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.16
சீட்டிழுப்பு இலக்கம் 517
சிம்மம் 16 18 32 43 சிம்மம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/16
சீட்டிழுப்பு இலக்கம் 5208
K 5 1 0 7 2 3
தேசிய லொத்தர் சபை


## 9 அத்தியாவசிய...

கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 970 ரூபாயாகும்.

1 கிலோ சோயா விலை 25 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 625 ரூபாயாகும்.

தாய்லாந்து நெத்தலி 15 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 1,160 ரூபாயாகும்.

இதேவேளை, 1 கிலோ பாஸ்மதி அரிசியின் புதிய விலை 675 ரூபாயாகும், இது 15 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

சிவப்பு சீனி கிலோ ஒன்று 350 ரூபாயாகவும் உருளைக்கிழங்கு கிலோ ஒன்று 325 ரூபாயாகவும் கொண்டைக்கடலை கிலோ ஒன்று 555 ரூபாயாகவும், பூண்டு கிலோ ஒன்று 630 ரூபாயாகவும், இப்பொருட்கள் அனைத்தும் 05 ரூபாயினாலும் குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ சிவப்பு கச்சா அரிசியின் புதிய விலை 147 ரூபாயாக உள்ளதுடன், அதன் விலையை 2 ரூபாயினால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பாம்பு கடித்ததில்...

சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் ஒரு வயது 7 மாதம் நிரம்பிய தனுஜன் ஜெஸ்மின் என்ற சிறுவனே உயிரழந்தவராவார்.

பாம்புக் கடிக்கு இலக்கான சிறுவன் உடனடியாக தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (ம-7,316)

## நீர்த் தட்டுப்பாடு...

அதற்கு தயாராக இருக்க வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

நுகேகொட அனுலா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, கல்வி முறையை மாற்றாமல் எதிர்காலத்திற்கு செல்ல முடியாதென குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வெளிநாடு...

பதிவாகியுள்ளது.

கிளிநொச்சி செல்வநகர் பகுதியை சேர்ந்த குறித்த நபர் ஆவரங்கால் பகுதியில் உள்ள உணவகத்தில் பணி புரிந்து வந்த நிலையில் அங்கு வரும் இளைஞர்களுக்கு ஆசை வார்த்தை கூறி வெளிநாட்டுக்கு அனுப்புவதாக நம்பிக்கையூட்டி பல கோடி ரூபாய் பணங்களை பெற்று விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த நபர் ஆவரங்கால் பகுதியில் உள்ள உணவகத்தில் கடந்த இரண்டு வருடங்களாக பணி புரிந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் உணவகத்துக்கு வரும் இளைஞர்களிடம் வெளிநாட்டு ஆசை வார்த்தைகளை கூறி அவர் திட்டங்களை வழி வகுத்துள்ளார்.

இவ்வாறு இருக்கும்போது புத்தூர் கலைமதி பகுதியைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட நபரிடம் வெளிநாட்டுக்கு அனுப்பும் செயற்பாடு முன்னெடுத்துச் செல்வதாகவும் அதற்கு ஒரு சில இலட்சங்களுடன் அனுப்புவதாக கூறி பல தவணைகளில் ஒரு கோடியே 15 லட்சம் ரூபாய் பணத்தினை பெற்றுள்ளார்.

பணத்தினைப் பெற்றவர் வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி இறுதியில் போலியாக தயாரிக்கப்பட்ட விமான ரிக்கெட்களை வழங்கிவிட்டு தலைமறைவாகியுள்ளார்.

பாதிக்கப்பட்ட நபர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய தலைமறைவான சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ம-7)

## புத்த சாசனத்தை...

யில் உள்ள பிவிதுரு ஹெல உருமய கட்சி காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்.

நாட்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்பவர்களுக்கு மாத்திரம்தான் பிரச்சினை உள்ளது என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு ஜனாதிபதி செயற்படுகிறார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மை சமூகமாக வாழும் சிங்களவர்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்படும். பௌத்த மரபுரிமைகள் முழுமையாக தமிழ்ப் பிரிவினைவாதிகளால் அழிக்கப்படும்.

2200 ஆண்டுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட குருந்தூர் தூபியை இந்துக் கோயில் என தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிடுகிறார்கள்.

நாளை (வெள்ளிக்கிழமை) குருந்தூர்மலையில் இந்து மத வழிபாட்டில் ஈடுபடப் போவதாக தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆகவே புத்தசாசனத்தை பாதுகாக்க பௌத்தர்கள் குருந்தூர்மலை பகுதியில் ஒன்றிணைய வேண்டும். குருந்தூர்மலையில் பௌத்த - இந்து மோதலை தடுக்கவும், தமிழ் அடிப்படைவாதிகளை கட்டுப்படுத்தவும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மல்லாகத்தில் பரிசு
NLB கொவி செத ரிக்கட்டில் சுபாஷினி முகவரின் விற்பனையில் நேற்று முன்தினம் 250,000/= ஒருவரால் வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. மேலும் NLB தனநிதானய மூலம் ரெயிந்தன் முகவரின் விற்பனையில் 100,000/= வும் NLB கொவி செத மூலம் நவக்குமார் முகவரின் விற்பனையில் 250,000/= வும் 14/08/2023 வெற்றி கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
NLB Distributor (16729)
Kanakalingam Thilakawathy, Jaffna

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2182 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.08.16 தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 10 28 61 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,356,380.40
சுப்பர் போல் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 32 34 43 56 W

சனிதா
திகதி 2023.08.16 வெற்றி வாரம் 4343 வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 26 38 48 52 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,449,576.00
சனிதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 10 21 44 71 T
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 3894 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.08.16 தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 29 45 48 52 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,330,168/-
ராசி அதிர்ஷ்டம் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 10 19 53 58 கடகம்

கப்ருக
திகதி 16.08.2023 வெற்றி வாரம் 1358 வர்ணம் வெளிர் நீலம்
W 02 03 20 48 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.428,890,374.20
கப்ருக "இரண்டாவது வாய்ப்பு" வெற்றி இலக்கங்கள் 27 53 57 74 H
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2023.08.16 வெற்றி வாரம் 1948 வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 10 61 63 67 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.45,478,775.20
ஜயோதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 06 29 58 59 T
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2008
வர்ணம் : றோஸ்
சீட்டிழுப்பு திகதி : 2023.08.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,942,360/-
வெற்றி இலக்கங்கள் 03 37 45 70 S
அத கோடிபதி "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 39 56 67 71 L
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**VILLAGE HOTEL**
**JAFFNA EXPRESS**
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/=
(16349)
T.P: 077 544 8503

# அதிகாரப் பகிர்வு இப்போது எதற்கு?

## மொட்டு எம்.பிக்கள் கேள்வி

(கொழும்பு)

இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்தக்கூடிய அதிகாரப் பகிர்வு விடயத்தில் தற்போது கை வைப்பது ஏற்புடைய நடவடிக்கை அல்ல என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, அதிகாரப் பகிர்வில் கை வைப்பதற்கான நேரம் அல்ல இது. வடக்கு மக்களுக்குப் பாரிய சில பிரச்சினைகள் உள்ளன.

விவசாய நிலப் பிரச்சினை, வாழ்வாதாரப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை என்பன உள்ளன.

அவை தொடர்பில் தற்போது நடவடிக்கை எடுக்கலாம். மாறாக இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்தக்கூடிய விடயங்களில் கை வைக்க கூடாது.

நாட்டில் தற்போது நெருக்கடியான சூழ்நிலையே உள்ளது என தெரிவித்துள்ளார். (ம-7)

**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம்
•சாவகச்சேரி •மானிப்பாய்
•நெல்லியடி •பருத்தித்துறை
•திருகோணமலை •வல்வெட்டித்துறை
•கோப்பாய் •புத்தூர்
•பண்டத்தரிப்பு •சங்கானை
•கொழும்பு (C-7081)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16686)
076 825 7716 (ஆகாஸ்)

**CANADA**
**VISITOR VISA**
VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7081)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

**வெளிநாடு செல்ல வேண்டுமா**
IELTS - Zoom மூலம் வீட்டிலேயே கற்கலாம்.
இலகுவான புதியமுறை Batch 3 ஆரம்பம்.
Call Rajeevan - 077 768 7821
RM Associate Facilitators
(16733)

**காணி விற்பனைக்கு உண்டு**
**யாழ்ப்பாணம் புத்தூரில் 32 பரப்பு**
**காணி விற்பனைக்கு உண்டு நிலப்பரப்பு**
•மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
•பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1K மீற்றர் தூரம்
•நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
•ஒரு பரப்பின் விலை (5 இலட்சம் ரூபாய்)
•பின் பக்கம் உள்ள காணி 1 பரப்பு 250,000 (இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம்) மட்டும்
•நல்ல சூழல் நன்னீர் ஊற்று
(16734)
076 057 0354
076 826 0354

**வீடு விற்பனைக்கு**
கொக்குவில் மேற்கு பகுதியில்
மூன்று அறையுடன் கூடிய
வடக்கு வாசல் வீடு
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
(16735)
076 105 6343

**காணி விற்பனைக்கு**
பளை புலோப்பளையில்
வீதி அருகாமையில் காணி
விற்பனைக்கு உண்டு.
வயலும் விற்பனைக்கு
உண்டு.
(16728)
076 564 7848

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி தனபாலன்



தாயின் மடியில் 1935.06.16 | இறைவன் அடியில் 2023.08.16

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி கிழக்கு நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலன் சரஸ்வதி அவர்கள் நேற்று (2023.08.16) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சபாபதி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற தனபாலனின் அன்பு மனைவியும் பாலசிறி (அலுவலகப் பணியாளர் - யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் - மட்டுவில்), சிறிமோகன் (நோர்வே), விஜயசிறி (நோர்வே), காலஞ்சென்ற சிறீதரன் மற்றும் சிவகௌரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவாஜினி, ஜெயக்குமாரி (நோர்வே), கிரிஜா (நோர்வே), சிறீஸ்கந்தராசா (உதவி முகாமையாளர் - தேசிய சேமிப்பு வங்கி, ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்பு மாமியும் பகீரதி, பாரதி (லண்டன்), சுதாமதி, நிருசிகா, சாருஜன் (நோர்வே), அக்ஷயன் (நோர்வே), கரிஷன் (நோர்வே), ரித்விகா (நோர்வே), மாதுளன், கபிஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், மாசிலாமணி, பவளமணி, அருளம்பலம், செல்வரத்தினம், அரசரத்தினம், திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தில்லைநாதர், யோகம்மா மற்றும் ஞானபூபதி, ஜெயலக்சுமி, சிவக்கொழுந்து, காலஞ்சென்ற காசிப்பிள்ளை மற்றும் இரத்தினசிங்கம், காலஞ்சென்றவர்களான மதியாபரணம், தனபாலராசா மற்றும் பரிமளகாந்தி, சற்குணபாலராஜா, காலஞ்சென்ற ரஞ்சிதமலர் மற்றும் விமலகாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2023) வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி. 077 691 3100 (16727)

தகவல் - பிள்ளைகள், மருமக்கள்

# மரண அறிவித்தல்



தோற்றம் 07 - 07 - 1937 | மறைவு 14 - 08 - 2023

## இராமு சத்தியவான்

(சிவநெறிச்செம்மல், பண்ணிசை வேந்தன், ஓய்வுபெற்ற துறைமுக அதிகார சபை உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம், வட்டு வடக்கைப் பிறப்பிடமாகவும் வட்டுமேற்கை வசிப்பிடமாகவும், கொண்ட திரு. இராமு சத்தியவான் அவர்கள் கடந்த (14.08.2023) திங்கட்கிழமை இறைவனடி அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தினப்புனவள்ளியம்மை அவர்களின் கணவரும் சத்தியதேவன், தில்லைநடேசன்(பிரான்ஸ்), காலஞ்சென்ற சத்தியபாமா மற்றும் சாரதா, கேசவன்(பிரான்ஸ்), சிவஞானச்செல்வி, லோகேஸ்வரி(லண்டன்), கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்னமலர், பத்மஸ்ரீ, விஜயகுமார், ஜெகதீஸ்வரி, சிவநாதன்(வைத்தியர்), கஜன், மலர்மதி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுப்ரமணியம் சிவபாக்கியம், மார்க்கண்டபிள்ளை லட்சுமிப்பிள்ளை, செல்லையா நாமுத்து, திருநாவுக்கரசு ராசம்மா, காசிப்பிள்ளை தேம்பாமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கீர்த்தனா, சிவஷங்கர், துர்க்கா, கௌதமன், சாலினி, கபிலன், செந்தூரன், தர்சன், தர்சினி, தனுசா, தர்சனா, சோதியா, துசியந்தினி, டிலுக்சன், சாருசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 17.08.2023 வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்கைத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(16730)

தகவல் - குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org